உ

ஓம்

பரப்பிரஹ்மணே நமஃ

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி	சித்தார்த்தி௵ ஆவணி௴ ௧௨	பகுதி
5	1919௵ ஆகஸ்டு௴ 17௳	2

கடவுள் வணக்கம்.

காயாத மரமீது கல்லேறு செல்லுமோ
    கடவுணீ யாங்க ளடியேம்
கர்மபந் தத்தினாற் சன்மபந் தம்பெறக்
    கற்பித்த துன்ன தருளே
வாயார வுண்டபேர் வாழ்த்துவது நொந்தபேர்
    வைவதுவு மெங்க ளுலக
வாய்பாடு நிற்கநின் வைதிக வொழுங்குநினை
    வாழ்த்தினாற் பெறு பேறுதான்
ஓயாது பெறுவரென முறையிட்ட தாற்பின்ன
    ருளறுவது கரும மன்றும்
உபயநெறி யீதென்னி னுசிதநெறி யெந்தநெறி
    யுலகிலே பிழை பொறுக்கும்
தாயான கருணையு முனக்குண் டெனக்கினிச்
    சஞ்சலங் கெடவருள் செய்வாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
    சச்சிதா னந்த சிவமே.

மாதத்தி லேயொரு திங்களுண் டாகி மடிவதைநின்
போதத்தி லேசற்றும் வைத்திலை யேவெறும் புன்மைநெஞ்சே
வேதத்தி லேதர்க்க வாதத்தி லேவிளங் காதுவிந்து
நாதத்தி லேயடங் காதந்த வான்பொரு ளைடிக்கொள்ளே.

வையக மாதர் சுகத்தையும் பொன்னையு மாயைமல
மெய்யையு மெய்யென்று நின்னடி யார்தம் விவேகத்தையு
மையமில் வீட்டையு மெய்ந்நூலை யும்பொய்ய தாகவெண்ணும்
பொய்யர் தங்கட்பை விடுவதென் றேபரி பூரணமே.

ஆனந்தபோதினி

சித்தார்த்தி ௵ ஆவணி ௴ ௧௨

வந்தவேலை என்ன?.

உலகவழக்கில் சாதாரணமாய் நம்மிடம் ஒருவர் வந்தால் அவரை நல்வரவேற்று உபசரித்த பின்னர் "என்ன காரியமாய் வந்தீர்களோ?" என்று வினவுவது சுபாவம். ஏனெனில் ஒருகாரியத்தைக் கருதியே ஒன்றைச் செய்கிறோம். காரணமின்றிக் காரியம் நிகழ்வதில்லை. ஆகையால் நாம் இவ்வுலகில் வந்து ஜனித்திருப்பதும் ஒரு காரியார்த்தமாகவே யிருக்கவேண்டும். சச்சிதானந்த இலட்சணமுடையதாய், ஈசுராமிசம் பொருந்தி, சலனமற்று, துக்கமற்று ஆனந்தநிலையில் இருக்கவேண்டிய ஆன்மா சத்ததாதுக்களாலாகிய இம் மலபாண்ட மாகியதும் கிருமிகள் நிறைந்தது மாகிய மெய்யெனப் பெயருடைய இப்பொய்த் தேகமாகிய கூட்டில்நுழைந்து கொண்டு இம்மண்ணுலகில் வந்திருப்பது ஒரு காரியத்தைக் கருதியே யிருக்கவேண்டும். இத்தேகமும் இதிலடங்கியுள்ள கரணங்கள் இந்திரியங்கள் முதலியனவும் கூட ஒரு காரியார்த்தமாகவே நமக்கு அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறு நாம் இங்குவந்தது என்ன வேலைக்காக? என்ற உண்மையை யறிந்துகொண்டு கண்ணுங் கருத்துமாய் அக்காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளப் பாடுபடவேண்டு மென்பதே ஆண்டவன் கட்டளையும் ஆன்றோர்கள் எண்ணிறந்த நூல்களில் கூறியிருப்பது மாகும். அவர்கள் அருளியபடி நாம் முற்பிறப்பில் செய்த நன்மையும் தீமையும் கலந்த கர்மங்களின் பலனை யனுபவித் தொழிக்கவும், அதேகாலத்தில், பிறப்பதும் இறப்பதுமே தொழிலாகிய இத்துக்க சாகரத்தினின்று கரையேறி அழியாத நித்தியானந்த நிலையாகிய பேரின்ப வீட்டையடைய வழிதேடிக் கொள்வதற்குமே இங்கு வந்திருக்கிறோம் என்று உணரவேண்டும்.

இருவினைப் பயன்களையும் நாம் அனுபவிப்பதற்கு அந்தக்கரணம், ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள், பொறிபுலன்கள் முதலியவைக ளடங்கிய இத்தேகமும், இப்பூலோகமும், இதிலுள்ள

பொருள்களும் அவசிய மானவையாதலால் சர்வவல்லமையுடைய பரம கருணா நிதியாகிய பகவான் எவ்வளவோ அன்போடு இவற்றை நமக்கு அளித்திருக்கிறார்.

அவர் இவற்றைச் சிருட்டித்த அற்புதமோ நமது சிற்றறிவிற்கு எட்டக்கூடியதல்ல. அது மனோவாக்கிற் கெட்டத்தக்க தல்ல. அவர் ஒன்று மில்லாத சூனியத்தி லிருந்தே தமது அபாரசத்தியால் மிக்க அற்புதமான இவைகளி யாவற்றையும் நமக்காகப் படைத்திருக்கிறார். நாம் வாசா கயிங்கரியமாய்ச் சாத்திரங்களில் கூறியுள்ளபடி மூலப்பிரகிருதியிலிருந்து ஆகாய முண்டாயிற்றென்றும், ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து தேயுவும், தேயுவிலிருந்து அப்புவும், அப்புவிலிருந்து பிருதிவியும் உண்டாயிற்றென்றும் கூறி விடுகிறோம். முதலாவது ஆகாயமென்பது என்ன வென்று நமக்கு விளங்குகிறதா? அதற்கு ஒரு உருவமாவது நிறமாவதில்லாதவரையில் ஒன்றுமில்லாத வெளியன்றி வேறொன்றும்நமக்குப் புலப்படுவதில்லை. வாயு நம்மேல் தாக்கும்போதுதான், நமது கண்ணுக்குப் புலப்படாவிடினும், எதுவோ நுட்பமான ஒன்று நம்மேல் தாக்குவதென்று உணர்கிறோம். ஆகாயம் சலித்தால் வாயுவென்கிறோம். ஒன்று மில்லாதவெளி, அதிலும் இடைவிடாது எங்கும் ஏகமாய் நிறைந்திருப்பது சலிக்கிறதென்கிறோம். இப்போது ஒரு வஸ்து அசைகிறதாயின் அது சாதாரணமாய்க் கொண்டிருக்கு மிடமன்றி வேறிடமும் வேண்டும். அப்படி யோசிக்குங்கால் ஆகாயம் அசைவதற்கு அதை விட வேறிடமேது என்று நமக்கு விளங்கவில்லை. எப்படிப் பார்த்தாலும் இந்த வாயுமட்டுமாவது ஒன்றுமில்லாததிலிருந்து உண்டாகிறதென்று நமக்குப் புலப்படுகிறது. இதனால் சிருஷ்டியின் அதியற்புதம் நமது அறிவிற்கு எட்டுவதாயில்லை யென்றறியலாம். இவ்வளவிற்கும் இப்போது நாம் பிரஸ்தாபிப்பதும் காண்பதும் ஸ்தூல பஞ்ச பூதங்களே. இவை தன் மாத்திரைகளென்ற சூக்கும பூதங்களிலிருந்து உண்டானவை. இவற்றின் விஷயமே யிப்படியாயின் சூக்கும பூதங்களின் விஷயம் நமக்கெப்படி விளங்கக்கூடும்!

நம்மேல்வைத்த கருணையால் இத்தகைய அதியற்புத சாமார்த்தியத்தால் நமக்குத் தநுவாதிகளை யருளிய ஆண்டவனது நோக்கத்திற்குத் தக்கவாறு நாம் எவ்வளவு தூரம் நடந்து கொள்கிறோம் என்பதைச் சிந்திப்போம்.

முதலாவது நமது பிராரப்த வினைகளின் பலனை யனுபவிப்பதில் எப்படி நடந்துகொள்கிறோம்? எவ்விதத்திலாவது வினைப்பயனை மேலோன் ஊட்டிவைப்பதால் நாம் அதை யனுபவித்தே தீருகிறோம் என்பதில் எள்ளளவும் ஐயமேயின்றாம். ஆனால் நாமோ நம் வினைப்பயனை யனுபவிக்கிறோம் என்று பெரும்பாலும் கருதுவதே

யில்லை. மற்றபடி என்செய்கிறோம்? வினைப்படி நடக்கும் விஷயங்களைக்கூட நம் செயலாகக் கொண்டு அகங்காரத்தால் "ஆ! நானைபடியாலல்லவோ இந்தக் காரியத்தை ஒரு நாளையில் முடித்து விட்டேன். வேறு எவனால் முடியும்" என்று வினை விதையை விதைக்கத்தொடங்கிக் கடைசியில் அதைப்பெரிய மூட்டையாக்கி விடுகிறோம். நம்மால் முடியாதகாரியத்தைப்பற்றி மட்டும் "நாமென்ன செய்யலாம்; என்னாலானவரையில் பார்த்தேன்; ஈசுவரசங்கற்பம் இப்படியாக முடிந்து விட்டது" என்றுகூறி, காரணத்தை ஈசன் மேல் போடுகிறோம். ஒரு தீவினையை யனுபவிக்கும்போது "அந்தோ இதை யனுபவிக்க வேண்டிய குற்றம் ஒன்றையும் நாம் மனமறிந்து செய்யவில்லையே. இது பூர்வ வினைப்பயனால் வந்ததாக வேண்டும். ஆண்டவன் திருவுளச் சம்மதப்படி நடக்கட்டும்" என்று பொறுமையோடு அதை யனுபவித்துத் தீர்ப்பதைவிட்டு, தெய்வத்தையும் உலகில் அச்செய்கைக்குக் காரண பூதராய்த்தோன்றும் மனிதர்களையும் மனம் சலிக்கும் மட்டும் நிந்திக்கிறோம். அது மட்டுமல்ல அம்மனிதர்மேல் வஞ்சங்கொண்டு அவர்களுக்கு இன்னல் புரிந்து தீவினையை வளர்த்துக் கொள்கிறோம்.

நல்ல வினைப்பயனை யனுபவிக்கும்போது மட்டும் சந்தோஷத்தால் "ஏதோ ஆண்டவன் கிருபைசெய்தார்" என்று சுருக்கமாய் அவரை வாழ்த்தி விடுகிறோம். ஆனால் இவ்வளவாவது கூறுபவர்கள் நம்மில் சிலரேயாவர். பெரும்பாலோர் அந்த நல்வினைப்பயனைத்தாங்களே யுண்டாக்கிக் கொண்டதாக அகங்கரித்து "அந்த ஒரு மாதத்தில் இரண்டு லட்சம் ரூபாய் சம்பாதித்தேன். இன்னொருவனையிருந்தால் ஏமாந்தேபோய் அப்படி இரண்டத்தனை நஷ்டமடைந்திருப்பான். ஜர்மெனிக்கும் பிரான்சுக்கும் சண்டையென்று தந்தி வந்ததே, இங்கிலாந்து கட்டாயம் பிரான்சின் பக்கம் சேர்ந்துகொள்ளுமென்றும், ஜர்மெனி சரக்கு பிறகு இங்கு வராதென்றும், உடனே யென்மனதிற்பட்டுவிட்டது. அன்றுதான் கப்பலில்வந்த சரக்கு முழுமையும் விற்கத் தொடங்காமல் அப்படியே கிடங்கில் வைத்துப் பூட்டிவிட்டேன்......" என்று கடவுளை யடியோடு மறந்து தன்னையே மெச்சிக்கொள்கிறான். "என் மனதிற் பட்டது" என்று தான் கூறியது யார் அருளால் நடந்ததென்று அவன் கருதுவதே யில்லை.

"காயாத மரமீது கல்லேறு செல்லுமோ

* * * * * * * * * *

* * * * * * * * * *

வாயார வுண்டபேர் வாழ்த்துவது நொந்தபேர்
வைவதுவு மெங்க ளுலக வாய்பாடு * * *" என்று

தாயுமானவர் அருளியது கவனிக்கத்தக்கது.

வினையை யனுபவித் தொழிக்கும் வேலை யிவ்வளவி லாய்விட்டது. இனிப்பிறவியை யொழிக்க என்ன முயற்சி செய்கிறோம் என்று பார்ப்போம்.

நாம் எடுத்திருக்கும் ஜன்மங்களுக்கு அளவேயில்லை. திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் ஒரு மகானைச் சந்தித்தகாலத்தில் அவரை நோக்கி "சுவாமி! நாம் எடுத்துள்ள ஜன்மங்கள் எத்தனை தான் இருக்குமோ" என்று கேட்டபோது, அப்பெரியார்,

"எடுத்தஜன னங்கடொறு மீன்றெடுத்தத் தாயார்
கொடுத்தமுலைப் பாலனைத்துங் கூட்டில்—அடுத்துவளர்
பன்னு கணைத்துயிலும் பாலாழி யும்சிறிதா
மன்னு சிதம்பர தேவா" என்று

விடையளித்த தாகக் கூறப்பட்டிருக்கிறது.

"நாம் எடுத்த பிறவிகள் ஒவ்வொன்றிலும் குழந்தையாயிருக்கையில் தாயாரிடம் உண்ட ஸ்தனப்பால் முழுமையும் ஒன்றாய்ச் சேர்த்துப் பார்த்தால் நாக சயனரான மகாவிஷ்ணு திருக்கண் வளரும் திருப்பாற் கடலைவிட அதிகமாயிருக்கும்" என்பது இதன் பொருள்.

இத்தனை ஜன்மங்களை யெடுத்த நாம் எந்தப்போகத்தைத்தான் அனுபவிக்காம லிருந்திருப்போம்? எந்த ஜென்மந்தான் எடுத்திராமலிருப்போம்? நாம் எடுக்காத ஜன்மமுமிராது, நாம் அனுபவித்துக் கழிக்காத போகமுமிராது என்பதே உண்மை. ஆனால் சென்றஜன்மத்தின் முடிவில் இறக்கும்சமயம் அடைந்த மூர்ச்சையாலும், பிறகு இந்த ஜன்மத்தில் பிறக்கும் சமயம் தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிவரும் போது அடைந்த மூர்ச்சையாலும் முன் ஜன்ம விஷயங்களும் நினைப்பும் அடியோடு மறந்துபோய் விட்டன. ஆயினும் அவ்வாறு நாம் மறந்து விட்டதினாலேயே முன் ஜன்ம விஷயங்கள் நடைபெறவில்லை யென்று கருதலாகாது. நாம் தாயின் கருப்பத்தில் சிசுவாயிருந்து வெளியில் வந்த விஷயம் நமக்குத் தெரியவே தெரியாது. அப்படியிருந்தும் நாம் அது நடந்ததாகவே ஒப்புக்கொள்கிறோம். மனதாரவும் நம்புகிறோம். அதைப்போலவே நாம் இது காறும் அனேக ஜன்மங்களெடுத்திருக்கிறோ மென்றும் அவற்றில் எல்லாப்போகங்களையும் அனுபவித்தே யிருப்போமென்றும் நம்பவேண்டும்.

* * * * * * * * * *

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாப் பாம்பாகி
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்

செல்லாஅ நின்றவித் தாவரச் சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமா.

என்று மாணிக்க வாசக சுவாமிகள் கூறியருளியவை கவனிக்கத் தக்கன.

நாமோ உலகில் எதைக்கண்டாலும் அப்போது தான் அதைப் பார்த்ததுபோல் வியப்புற்று அதில் ஆவலுடையவர்களாய் விடுகிறோம். 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்பதுபோல் இவ்வுலகபோகங்களை யனுபவிப்பதே நாம் அடையவேண்டிய பிறவிப்பயன் என்று கருதி அதற்குப் பொருள்தேடுவதே வேலையாய் அலைந்து திரிகிறோம். அதனால் சுயநலப்பேய் பிடித்து நமது எண்ணத்தை யீடேற்றிக்கொள்ளப் பிற ஜீவன்களுக்குத் தீங்குசெய்து பெரும்பாதகத்தைத் தேடிக்கொள்கிறோம். அற்ப சுகத்தை யனுபவிப்பதாய்க் கருதி அதற்காகப் பெருந்துன்பங்களை யடைகிறோம். ஆசையெனும் பேயின்வசத்தில் பூரணமாய்ச் சிக்கிக்கொண்டு பஞ்சும் படாத பாடுபடுகிறோம். நாம் வந்தவேலை யென்னவென்று சிந்திப்பதை யடியோடு மறந்து, ஒவ்வொரு பிறவியினும் ஆண்டவன் கொடுத்த அற்பகாலமான வாழ்நாளை வியர்த்தமாக்கிவிட்டு அதன் முடிவில் அந்தகார வடிவமான காலன் கையிற் சிக்கிக்கொள்கிறோம். இப்படியே பல ஜன்மங்களின் முடிவிலும் நாம் 'நம்முடையது நம்முடையது' என்று நம்பி யிருந்த களத்திர புத்திரமனையாதி போக பாக்கியங்கள் யாவற்றையும் கை விட்டு, நாம் எவ்வளவோ அக்கரையோடும் ஆசையோடும் நல்ல உணவாதிகளைத்தினித்து ஆடையாபரணாதிகளா லலங்கரித்துப் பாதுகாத்து வந்த தேகத்தையும் மண்ணுக்கோ, தீக்கோ, புழு, நாய், நரி, கழுகுகளுக்கோ தத்தம் செய்துவிட்டுச் செல்கின்றோம். மறுபடி அடுத்த ஜன்மம்வந்ததே பழைய கந்தனே கந்தன் என்று முன்போலவே நிலையற்ற போகத்திற்கே உழைக்க வாரம்பிக்கிறோம். அந்தோ அறிவாளிகள் இந்த உண்மையையுணர்ந்து, சிந்தித்துச் சிந்தித்து, "வந்தவேலை" யின்னதென்றுணர்ந்து அதற்குப் பாடுபட்டு அதை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். அவர்கள் தநுகரண மாதிகளைத் தங்கள் காரியசித்திக்கு வேண்டியகருவிகளாக உபயோகப்படுத்திக்கொள்கிறார்கள். ஆண்டவன் கொடுத்த அதே கருவிகளைக்கொண்டு அவர்கள் அழியாத நித்திய இன்பவாழ்வை யடைகிறார்கள். நாமோ, அதே கருவிகளைக் கொண்டு பெருந்துன்பத்தைச் சம்பாதித்துக்கொண்டு அவதிப்படுகிறோம்.

இனி நாமும் அவர்களைப்போல் "வந்த வேலையை" முடித்துக்கொள்ள வேண்டுமாயின் என்ன செய்ய வேண்டு மென்பதைச் சிந்திப்போம். (தொடரும்)

ஓம் தத்ஸத்

ஸ்ரீராமர்

சிலர் விஷ்ணுவின் தச அவதாரங்களில் ராம அவதாரம், பொய்யென்றும், ராமருக்கு கடவுளுக்குரிய தன்மைகள் இல்லையென்றும், இராமாயணத்திலுள்ள பல விஷயங்களை உதாரணமாகச் சொல்லுகிறார்கள்.

'எங்கும் நிறைவுற்று ஏகமாய் விளங்கும் பரம்பொருளானவர், தர்மம் குன்றி அதர்மம் மேலோங்குங்கால் தர்மத்தை நிலைநாட்ட மானிடனைப் போன்று உலகத்தில் வந்து அவர்களைப்போன்று நடித்து, தர்ம விஷயங்களைச் செய்கையால் செய்து காண்பித்து தர்மத்தை நிலை நாட்டுவதாக வேதங்கள் கோஷிக்கின்றன.

மாந்தர்கள், உலகம் இன்னது, தாம் இன்னார் என்று, முதலாவதாக அறிந்து கொண்டால், அவர்கள் பலவித பாவத்தொழிலுக்காளாகார்கள் என்பதைக் காட்டும் பொருட்டு ஸ்ரீராமர் 12 ஆண்டிற்குள் கலைஞானம் கற்றுக் காசியாத்திரை போய் வந்தவுடன், அன்னம் ஏற்றுக்கொள்ளாமலும், ஆடை யணியாமலும் தாம் ஓர் அறையில் படுத்துக்கொண்டு, "இவ்வுலக போகம் மித்தை; இச்சரீரம் நீர்மேற்குமிழி; இன்றைக்கோ இந்த நிமிடமோ அழிந்துபோகும், இச்சடலத்தை இனி கவனியேன்; எனக்கு யாதொரு வைபோகமும் வேண்டாம்" என்று விரக்தியடைந்திருந்தார். பிறகு வசிஷ்டரால் ஞான உபதேசம் செய்யப்பட்டு, தாம் வந்தவேலையை நிறைவேற்றத் தொடங்கினார். (இவ்விஷயங்கள் ஞானவாசிட்டம் என்னும் நூலில் பரக்கக் காணலாம்)இதனால், நாம் ஒவ்வொருவரும் 12 வயதிற்குள் கல்விகற்று தக்க ஆசிரியனையடுத்து ஞானத்தைப் பெறவேண்டும் என்று உணரலாம். இந்தப் பரீக்ஷையில் தேறியவர்களுக்கு பரிசளிப்புக் கொண்டாட்டம் கொண்டாடுவதுண்டு. அதாவது இவன் பிர்ஹமஞானி யாகையால் "உபநயனம்" செய்விக்கப்பட்டது என்று, நூலால்செய்த முப்புரி நூலை அவன் அணிந்து கொள்ளும்படி செய்வார்கள்.

இப்போது இவ்வுபநயனம் மேலே சொல்லிய விஷயங்களுக்கு முரணாக நடைபெறுகிறது.

துஷ்டர்களால் பெரியோர்களுக்கேற்படும் துன்பங்களை நீக்கவேண்டுமென்பதைக் காட்டும் பொருட்டு, விஸ்வாமித்திரருடன் கானகஞ் சென்று கடவுளை சதா துதிசெய்துவரும் இருடிகளுக்கு இடுக்கண்புரியும், அசுரர்களைச் சங்கரித்தார். இதனால்அடியார்கள், பக்தர்கள், யோகிகள், ஞானிகள், தபசிகளுக்கு மூடர்களால் தீங்கேற்படாமல் காப்பதுடன் அவர்களுக்கு அடிமையாகவேண்டு மென்று, புலனாகிறது.

ஒரு பெண்ணை விவாகம்செய்வது நிராசையாக இருக்கவேண்டுமென்பதைக்காட்டும் வண்ணமே, ராமர் ஜானகியை மணந்தார். மிதிலையில் ஜனகருடைய மகளை வரிப்பதற்காக ஸ்ரீராமர் செல்லவில்லை. ஒருவராலும் வளைக்க முடியாத வில்லொன்று இருப்பதாகவும் பலர் அபஜெய மடைந்ததாகவும் கேள்வியுற்று அங்குசென்று அவ்வில்லைவளைத்தனர். வில்வளைத்தவர்களுக்கு ஜானகியை அளிப்பதென்ற விரதமாகையால், ஸ்ரீராமருக்கு ஜானகி தேவையில்லை யென்றாலும், ஒருவருடைய விரதத்திற்கு பங்கம் செய்யலாகாதென ஜானகியை அவர் மணந்தனர். ஆகவே ஒருமனிதன் விவாகம்செய்யவேண்டுமென்று கருதலாகாதென்றும், எதிர்பாராத சம்பவமாய்ப் பெண் கிடைத்தால் அவளை மணந்துகொள்ள வேண்டுமென்றும், தெரியவருகிறது. இப்போதுகூட க்ஷத்திரியர்களில் விவாக மாப்பிள்ளை வில்வாளுடன் கானகத்தி

விருந்து வருவதுபோன்றும், அவனைக் கட்டாயத்தின் பேரில் அழைத்து வந்துபெண் கொடுப்பது போன்றதுமான சடங்குகள் நிகழ்கின்றன.

பெற்றோர்களின்வாக்கிற்குப் பணிந்து நடக்கவேண்டும் என்பதை யனுபவமாய்க்காட்டும்பொருட்டு, ஸ்ரீராமர் "தாய்சொல்துறந்தால் வாசகமில்லை, தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற வாக்கியங்களின்படி பெற்றோர்களின் வாக்கை பங்கம்செய்யாமல் கானகம் சென்றார். இதனால் நம் பெற்றோர்கள் நன்மை செய்தாலும் தீமைசெய்தாலும் அவர்கள் மனங்கோணாமல் அவர்கள் காலாலிட்ட வேலையைத்தலையால் செய்யவேண்டுமென நன்கு விளங்குகிறது.

எம்மதஸ்தரிடத்தும் எக்குலஸ்தரிடத்தும் அவர்கள் தகுதியுடையவர்களா யிருக்கிறவரையில், நேயமும் சகோதரப்பான்மையும் செலுத்தவேண்டும் என்பதை அறிவிக்கும் பொருட்டு, படகு ஓட்டும் செம்படவனாகிய குகனிடம் சகோதரப்பான்மை கொண்டு அவனைத் தம் நேயனாக ஏற்றுக்கொண்டார்.

நாம் ஒரு பெண்ணை மணந்தபின் அப்பெண் தவிர மற்றப்பெண்களிடம் காதல் கொள்ளலாகாதென்றும் நம் சுகதுக்கங்களில் அவளையும் சமமாய்க் கருதவேண்டுமென்றும் காட்டும்பொருட்டு, ஜானகியைத் தம்முடன் ஆரண்யத்திற்கிட்டுச்சென்றார். புருடன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் துரோகம் செய்தால் அகலியைப் போன்றும், சரியாய் நடந்துகொண்டால் அருந்ததியைப்போன்றும் வாழலாமென்பதை உவமானமாகக்காட்டும் பொருட்டு கலியாணகாலத்தில் அம்மி மிதித்து அருந்ததியைக் காட்டும் வழக்கமுண்டு.

எந்தெந்த விடத்திற்கு எந்தெந்த ஆச்சாரம் உண்டோ அந்தந்த ஆச்சாரத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்பதை அறிவிக்கும் பொருட்டு, தாம் ஒருசக்கரவர்த்தியின் புதல்வராக விருந்தும் தமக்கு வேண்டியசாமான்கள் எங்கிருந்தாலும் பணியாளர்கள் மூலம் தருவித்துக்கொள்ளப் பிரியப்படாமல் தாம் தம்பத்தினி சகோதரர் மூன்று பேர்களும் தாங்கள் அணிந்திருந்த ஆடை ஆபரணங்களை நீக்கி மரப்பட்டைகளை ஆடையாகத்தரித்து, கந்த மூலங்களைப் புசித்து வந்தார்கள். ஞானியாக வெளிப்பட்டவன் ஒரு ஸ்தலத்தில் பற்றுடையவனாக இருக்கலாகாதாகையால், ஒரே வனத்தில் வாசம் செய்தால் அவ்வனத்திலுள்ள மிருகம், பக்ஷிகள், செடிகள்மீது பற்றுதலுண்டாகுமென்று பலவனங்களில் சுற்றித் திரிந்தார்.

"பெண்சொல் கேட்டு அம்பல மேறலாகாது" என்பது பழமொழி ஸ்ரீராமர் பொய்மானென்று தெரிந்திருந்தும், மேலே செப்பிய பழமொழிக்கு மாறாக நடக்கவேண்டிய காரணமென்? பெண்களுக்குப் பின்யோசனையேயல்லாமல் முன்யோசனை இருப்பதில்லை. பெண்களுக்குப் பிடிவாதகுணமுண்டு. அவர்கள் பிடிவாத குணத்தால் அவர்களுக்கும் புருஷர்க்கும் உண்டாகும் தீமைகள் இத்தகையன வென்பதைத் திருட்டாந்தமாகக்காட்டி யுலகோர்க் கறிவுண்டாக்குவதற்காகவே சீதையின்சொல்படி இலக்ஷ்மணரைச் சீதைக்குக் காவலாகவைத்து மானைப் பின்பற்றிச்சென்றார். தன் மூத்தோனிடத்தும் தன் அண்ணியிடத்தும் இளையோன் நடந்துகொள்ளவேண்டிய விதிகளை ஸ்ரீலக்ஷ்மணர் செய்கையால் நடத்திக்காட்டியுள்ளார். ஸ்ரீலக்ஷ்மணருடையகுணத்திற்கு விரோதமான இளையோர்களே உலகத்தில் மிதமிஞ்சியுள்ளார்கள். ஸ்திரீகளின் பிடிவாத குணங்களால் வரும் தீங்குகளை நமது ஆனந்தன் பன்முறை புகன்றுள்ளான். ஆகவே நாம் விஸ்தரிக்க வில்லை.

"தந்தைக்குப்பின் தமையனே குடும்பத்திற்குத்தலைவன். அவனே இளையோர்கள் தகப்பனாக வணங்கத்தக்க பிதா, குரு, ரக்ஷகன், கடவுள்" என்பதைப் பரதன் நடக்கையால் காண்பிக்கிறான். இளையாள் மூத்தாள் பிள்ளைகளுக்குச் செய்யும் கொடுமைக்காக, இளையாள் மக்களே தம் அன்னையாகிய அவளைச் சீர்திருத்தவேண்டுமென்பதும், அவள் அதற்கு மீறினால் புத்திரன் குடும்பத்தலைவனான மூத்தாள் மகனைச் சார்ந்து அவன் காலாலிட்ட பணியைக் கையாற் செய்யவேண்டும் என்பதுமே இதன் கருத்து.

மிருகங்கள் பக்ஷிகள் ஞானிகளுடன் பேசுவதும், அவர்களுக்கு உபசரிப்பதும், அவர்களை முகமலர்ச்சியுடன் அழைப்பதும், அவர்களை அழைத்து அவர்களுக்கு வேண்டுவனவற்றை அளிப்பதும், ஸ்ரீராமர் ஜானகியைத் தேடிச் செல்லுங்கால் பக்ஷிகள் ராவணனுடன் போர்புரிந்ததும், சாதாரண ஜனங்களுக்கு வியப்பையளிக்கும். மிருகங்கள் உபசரிப்பதும், உதவி செய்வதும் ஞானிக்களுக்கேயன்றி மற்றையோருக்கன்று. ஆகவே இங்கு யாவரும் ஞானபோதனையடைந்தால் இதன் உண்மை அறியலாம். வீண்விதண்டவாதிகளுக்கு, ஸ்ரீராமருக்குப் பக்ஷிகள் மிருகங்கள் உதவிசெய்ததாகக் கூறப்படுவது ராமாயணம் எழுதியவருடைய கற்பனையென்றேதெரியும். அஞ்ஞானிகளுக்கு இவை சாமான்யத்தில் புலனாகாது. சுக்ரீவன் வாலிக்கு யாதாமொரு தீங்கு செய்தவனல்ல; வாலி சுக்ரீவனுக்குப் பலவிதக் கொடுமைகள்செய்தான். சுக்ரீவன் "அண்ணா! நான் உமக்கு யாதொரு கெடுதியும் செய்யவில்லை. அப்படித் தீங்குசெய்ததாகத் தங்களுக்கு என்மீது தோற்றினால் க்ஷமிக்கவேண்டும்; உமக்குத்தொண்டு செய்கிறேன் என்று கேட்டபோது அவனை அடித்துத்துரத்தி அவனுடைய மனைவியையும் வாலி சேர்த்துக்கொண்டான். வீட்டு மிருகம் பக்ஷிகள் தவிர மற்றவைகள் மனிதர்களைப்போன்று ஆண் பெண் இரண்டுமட்டுமே சேர்ந்து வாழ்வதுண்டு. இக்கொள்கைக்கு விரோதமாகவும், அபயமென்றவனைக் காப்பாற்றாமல் அவனுக்குத் தீங்கிழைத்ததாலும் ஸ்ரீராமர் வாலியைக்கொன்று சுக்ரீவனுக்குப் பட்டம் கட்டினார். ஆறு அறிவையுடைய மனிதர்களாக இருந்தும், தன்பெண்சாதி இருக்க அயலான் மனையாளைச் சேர்த்துக் கொள்பவனையும், ஒருவருக்கும் தீங்கு செய்யாதவனுக்குப் பாதகம் செய்பவனையும் இப்பூமியில் வாசம் செய்யாமல் உத்தமர்கள் செய்யவேண்டுமென்பதே வாலி மோட்சம் தெரிவிக்கிறது. (தொடரும்)

எஸ். அயோத்திராம்

தெய்வமிகமேல்

நமது மூதாட்டி ஔவையார் கருணைகூர்ந்து இயற்றியருளிய நன்னூற்றிரட்டுகளில் ஒன்றாகிய ஆத்திச்சூடியின் அடிகள் ஒவ்வொன்றும் பொருள் செறிந்துளதாகலின், 'பாடப்பாடப் பண், தோண்டத் தோண்டத் தண்' என்றபடி மூதுரை, முதுமொழிக்காஞ்சி, கொன்றைவேந்தன் ஆத்திச்சூடி முதலியவைகளை ஊன்றி நோக்க நோக்க உண்மை வளம் பெரிதும் விரியும்.

தற்போது நம்மவரில் பெரும் பான்மையோர் படும்துயரம், நம் நாட்டுத் தெய்வத்தை மறந்தும் புகழாது, மேல் நாட்டுக்கொள்கையின் வயமாய் வெளிப்படையாய் மதங்களையும் மதவொழுக்கங்களையும் மதத் தெய்வங்

களையும் இகழ்ந்து வருகிறதினாலேயே அவர்க்கு மிகுதியும் விளைந்திருக்கின்றது. ஆனதுபற்றி 'தெய்வமிகழேல்' என்ற வாக்கியத்தின் பெருமையைச் சாலவும் நம்மவர்களுக்கு வற்புறுத்தும் சமயம் இதுவெனத் துணிந்தேன்.

'தெய்வமிகழேல்' என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகையாய் தெய்வத்தையிகழேல் எனவிரியும். அதாவது தெய்வத்தை நிந்திக்கக் கூடாது என்பதாம். 'நன்றிமறப்பது நன்றன்று - நன்றல்லது அன்றே மறப்பது நன்று' என்றதை யறமறந்த பதர்களே பிறரை யிகழ்ந்து உரையாடுவர். பெரும்பாலும் தன்னகம் பிடித்தவர்களே இவ்வாறுபிறரை யிகழா நிற்பவரானது பற்றி 'அகங்காரம்' என்றதைப்பற்றிப் பின் எடுத்துக் கொள்ளலாயிற்று.

தாய், தந்தை, குரு, அரசன், தெய்வம் என்ற ஐங்குரவர்களில் எவரையேனும் நிந்திக்கவாவது யிகழவாவது கூடாது. எனினும் தன்னைப் பெற்று வளர்த்து, பாலூட்டிப் பொட்டிட்டு மைதீட்டி கட்டிலிலும் தொட்டிலிலும் தாலாட்டிச் சீராட்டி, பள்ளிக்கனுப்பி காலாகாலத்தில் கலியாணம் முதலியன செய்வித்து வேண்டுவன அளித்து, நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக அன்புடன் ஆதரித்துதவிய தாய் தந்தையர்களை ஒருபொருட்டாய் நினையாது "அவர்களென்ன பேருதவி புரிந்துளர்? செய்யவேண்டிய கடமைகளைச் செய்தார்களேயன்றி வேறொன்று மில்லையே" எனவாதிக்கும் பிள்ளைகள் தங்கள் தாய் தந்தையர்களைப் போற்றிக்காப்பாற்றும் கடமையை மறந்திருக்கும் இக்கலிகாலத்தில், மறைபொருளாய் எங்கும் நிறைந்து நின்று இயங்கும் கடவுளைப் போற்றித் தொழாது நிற்கின்ற தன்மை ஒரு ஆச்சரியத்தை விளைவிக்கக் கூடியதல்ல.

பல தேசத்தவர்களின் கூட்டுறவு அதிகமாகி வருகின்ற வளத்தின் பயனாய், பல சாஸ்திரவாதிகளின் கொள்கைகள் பரவி வரவர உலகம் தானாக உண்டானதென்றும், ஆதி காரணமாவுள்ளது இயற்கை, காலச் செயல், சுபாவம், என்றுங்கூறி, கடவுளின் செயலை மறுத்து நாஸ்திகவாதம் ஆடுகின்றவர், தெய்வவழிபாடு வந்தனை செய்கிறவர்களைத் தூஷித்தல், கேலிசெய்தல் அவர்க்கு இடுக்கண் பல இழைத்தலுமாகிய இவற்றால் தெய்வ வழிபாட்டின் வழியிலிருப்பவர்களுக்குக்கூட மனம் வேறுபட்டு மயங்கக் காரணம் பலவாகின்றது. அந்தோ அத்தகைய அறிவிலிகள் பின்னால்வரும் நரகவேதனையை யுணராது நடக்கிறார்கள்.

மட்டு மரியாதைக் கடங்காத பிள்ளைகளைக்கண்டுழி, தாய் தந்தையர்களுக்கு எவ்வளவு மனவருத்தமும் கிலேசமும் உண்டாகின்றது. அதுபோல பக்தி சிரத்தையில்லாத ஜீவனைக் கண்டால் பரமாத்மாவுக்கும் மனத்தாபம் உண்டாகு மன்றோ! தெய்வம் என்ன செய்யப்போகின்றது, அதற்குக் கண்ணா, காதா, என்னவிருக்கின்றது? தெய்வம் நேரில் வந்தா கேட்கப்போகின்றது? வந்து கேட்கட்டுமே, அப்புறம் பேசிக்கொள்வோம்! என்ற நினைவுமேலாடி, தெய்வத்தைப்பொருட்படுத்தாது நிந்திக்கத் தலைப்படும் சிற்றறிவுள்ள நண்பர்கள் என்னசெய்வார்கள் பாவம்! தெய்வத்தை நிந்திப்பதால் விளையும் கஷ்ட நஷ்டங்களையும் துன்பங்களையும் கிஞ்சித்தேனும் அறிவார்களானால் இவ்வண்ணம் தெய்வ நிந்தனை செய்யத் தலைப்படமாட்டார்கள் என்பது திண்ணம்.

கேவலம் பூமியைப்போன்ற கிரகங்களின் சலனத்தால் நம்மவர்கள் ஒவ்வொருவருக்கும் முறையே நம்தேசத்திற்கும் பலவிதமான கஷ்ட நஷ்டங்கள் விளைகின்றன. குருசந்திரர்கள் அஷ்டமத்தில் சலிக்குங்காலங்களில் சரீரத்திற்கு பீடையும் மனதிற்குக் கிலேசமும் திரவியநஷ்டமும் வருகின்றன. சுக்கிரனைப்போல் கொடுப்பாரும் சூரியனைப்போல் கெடுப்பாருமில்லை என பலஜனங்கள் சொல்லக் கேள்வி. சனீஸ்வரன் மனத்தாபத்தால் நிடததேசத்து மன்னனாகிய நளன் நாடுநகரங்களை யிழந்து பாதசாரியனாய் தம்பதி சகிதம் கானகம் புக்கு, உடுக்கத் துணியும் உண்ணச் சோறுமின்றி பட்டகஷ்டங்களுக்கு கணக்கு வழக்குண்டோ? நவக்கிரகங்களின் சலனத்தாலேயே இவ்வளவு துயரம் உண்டாகுமாயின், அண்டகோளங்களை ஆக்கியளித்துக் காக்கும் பரமன் வெகுளின் எவ்வளவு தீங்கு சம்பவிக்கும்!

தெய்வத்தைக்கண்டார் யார் ?என்று நினைந்து பலர் தெய்வச்சிந்தனையை விலக்குகின்றனர். பூர்வ புண்ணிய பரிபக்குவம் பெற்றவரும், அவன் அருளாலேயே அவன்தாள்போற்றும் பக்தசிரோன் மணிகளும், மனோ தத்துவ ஆராய்ச்சிகளில் முயன்று முதிர்ந்த அனுபவப் பயிற்சியால் தவசாதனம் பெற்றவரும், பக்தியென்ற தெப்பத்தேறி வாழ்க்கைப் புணரியைக் கடக்கா நிற்பவர்களும் சர்வலோக சரண்யனைக் கண் கூடாகக் கண்டு களித்து ஆனந்த சாகரத்திலாழ்ந்து சிலர் ஜீவன் முக்தராகவும், சிலர் சித்தர்களாகவும், பலர் பக்தர்களாகவும் சான்றோர்க் குதவிபுரிந்து வருகின்றனர். ஏனையர் கடவுளை நேரிற்கண்டாரில்லை யென்பது பெரிதும் உண்மை.

கடவுளை நினையாதான் தன் கவலைகளினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளமுடியாமல் தவிக்க நேரிடும். மேலும் பிறவித் துன்பத்தை ஒழிக்க முடியவே முடியாது. குருவின் அருள் இல்லாதானுக்கு எப்படி ஞானம் கிட்டாதோ, அவ்வண்ணமே தெய்வ கடாக்ஷம் இல்லாதானுக்கு நல்வினை தீவினை யென்னும் இருவினைகளினின்றும் தன்னை விடுவித்துக்கொள்ள உபாயம் தோன்றாதொழியும். தெய்வத்தைப் போற்றாமையால் முற்கூறிய கஷ்ட நஷ்டங்கள் விளையுமெனின் தெய்வத்தை யிகழ்வதால் விளையும் தீவினை என்னவாகும். தெய்வத்தை ஆராதனைசெய்து வாழ்த்தித் துதிக்க மறத்தலால் விளையும் துன்பம் ஒரு தன்மையது. தெய்வத்தைப் புகழ்வதற்குப் பதிலாய் இகழ்வதால் மன்னிக்கக்கூடாத பெரும்பாவமும் குற்றமும் சம்பவிக்கும்,

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற தமிழ் வேதவாக்கியத்திற்கேற்ப ஐங்குரவர்கள் செய்தநன்றியை மறக்கக்கூடாது. இவ்வைவரில் முதல் நால்வர்கள் இம்மையிலும் உதவுபவர்கள். ஐந்தாவதாகிய கடவுளோ இம்மை மறுமை யிரண்டிலும் உதவக்கூடியவராய் தாய்க்குத் தாயாகவும், தந்தைக்குத் தந்தையாகவும் குருவிற்குக் குருவாகவும், மன்னர் மன்னர்க்கு மன்னனாகவும் விளங்குகிறவராய், அனாதிகாலந் தொடங்கி அன்றும் இன்றும் என்றும் ஒரே புருடனாய் மூர்த்தி கரித்து அத்திமுதல் எறும்பீறான உயி ரத்தனையும் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழிலையும் செய்து கொண்டு, அணுவுக்குள் அணுவாய், விராட்சொரூபமாய் அண்டத்திலும் பிண்டத்திலும் தூணிலும் துரும்பிலும் எங்கும் நிறைந்து பிரகாசியாநின்று, அறு சமயங்கட்கு மெட்டாத பொருளாய் தற்பரனாய், அருள் தெளிவாய், ஜோதி

வடிவாய் ஆனந்த ஸ்வரூபியாய் விளங்குபவர். இத்தகைய பரம்பொருளைத் தம்மா லியன்றமட்டிலுமாவது பக்திபூர்வமாய் மனமார்ந்த துதிசொல்லிப் போற்றும் கடமையைமறந்து, கடவுள் ஒருவர் உளர் என்ற எண்ணமேயில்லாதவராய்த் தற்போது கிடைத்துள்ள நீரிற் குமிழிபோன்று தோன்றி யழியும் இம்மை யனுபவங்களிலே மனதைச் செலுத்தாநின்று செருக்குற்று மதிமயங்கி மதியாது அவமதித்த பலர் 'அரசன் அன்று கொல்லும் தெய்வம் நின்று கொல்லும்' என்ற ஆன்றோர் மொழிப்படி, தெய்வாபராதத்திற்குப் பாத்திரர்களாகி வாளா அழிந்திருக்கின்றனர்.

'தெய்வம் சீறிற் கைதவமாளும்' என்ற உண்மை தெய்வத்தை யிகழ்வதால் பெறப்படுவதெனப் புராணக்கதைகளின் வாயிலாக நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது.

(1) தபோபலத்தின் மகிமையால் ஈசுவராதிகளிடம் பெற்ற வரங்களின் விசேஷ வலிமையால் தானே பெரியவனென்று, திரிலோகாதிபதியாய்த்தேவர்களைக் குற்றேவல் கொண்டு தன்னாதிபத்தியம் செலுத்தலுற்ற செருக்கினால் விஷ்ணுத் துரோகியாய், நாராயண நாமத்தை மனதிலும் ஸ்மரிக்கின்றவர்கள் எவரேனும் சரி, அவர்களை க்ஷுத்பாதை, ரணபாதை, சித்திரவதை முதலிய பிராணஹிம்சை செய்யும் தண்டனைகளுக்குள்ளாக்கி வருத்தி, தெய்வத்தை ஒருபொருட்டாய் எண்ணாது மனப்பூர்வமாய் இகழ்ந்த இரணியகசிபு, பாகவதசிரோன்மணியாகிய பிரகலாத ஆழ்வாருடைய பக்திக்கியைந்து அவதரித்த நரசிம்ம மூர்த்திக்கு இரையான கதை 'தெய்வமிகழேல்' என்றதை நன்கு விளக்கும் உதாரணமாகும்.

(2) திரிகரண சுத்த மன மாண்பும் தபோபலமுமுள்ள காசிபமுனிவர்க்குப் பிறந்ததின் விசேஷபலனாய்த் தோய்ந்த நிதியும் சகல வரமும் பெற்று காலனையும் வென்ற மார்க்கண்டேயரது சரிதையைக்கேட்டு பரமசிவனருளால் அழியா வரம்பெறலாமென்றதை யறிந்து கொடுந்தவம் புரிந்து பக்தியின்வலையிற்பட்ட கண்ணுதலிடமிருந்து அனேகவிதமான அற்புத வரங்களைப்பெற்றும், அசுர குருவாகிய சுக்கிரபகவானிடம் இந்திர ஜாலங்களைக் கற்றுக்கொண்ட சுரசை என்னும் தாயின் மனப்படி தேவர்களுக்குவிரோதமாய் செல்வம் சௌரியம் முதலியவைகளை அடைந்து தேவர்களை அழிக்க வழிதேடி, தேவர்களையும் முனிவர்களையும் வருத்தி உலகத்தில் பாவ கருமங்கள் அதிகமாக புண்ணியகருமங்கள் குறைவாகத் தெய்வங்களையிகழ்ந்து வந்த சூரபதுமன், தாருகன், சிங்கமுகன் என்ற மூவர் ஆண்டவன் ஆறுமுகப் பெருமான் திருக்கை வேலுக் கிரையாகிய விதத்தை விரிவாய் ஸ்காந்தபுராணத்தில் காணலாம்.

(3) உலக மாதாவாகிய உமாதேவியையே புதல்வியாகப்பெற்று அன்னாள் மனப்படி பரமேசுவரனையே மணமகனாய் அடைந்த தக்கன் பரமசிவனை ருத்திரபூமியிலாடும் அசுத்தனென்றும், பித்தனென்றும், சாம்பலாண்டி யென்றும், பாம்பாட்டி என்றும், கௌபீன சுத்தனல்லன் என்றும் பலவிதமாய்ச் சிறுவிதியின் வலியிலாழ்ந்து பெரியோரான ததீசியின் புத்திமதியைத் துறந்து, பரமசிவன் தன் மருமகனானதுபற்றித் தன்னிலும் சிறுவனென மதித்து, செருக்குப் பெரிது மீறி பரம கருணாநிதியை உதாசீனம் செய்து, தான்செய்த வேள்விக்கழைக்காததோடு, தகப்பன் என்ற வாஞ்சையால் தன்னிடம் வந்த தாக்ஷாயணியைக் கேவலம் செய்து துரத்தி, சிவபெருமானை யிகழ்ந்ததின் நிமித்தம் தக்கன் அடைந்த கதியை யறிந்தவர்கள்

தெய்வத்தை யிகழ்வதால் வரும் துன்பத்தினளவு இவ்வளவெனத் தெரிந்து கொள்ளலாகும்.

மேற்கூறிய மூன்று உதாரணங்களும் இதிகாச புராணங்களிலிருந்து எடுக்கப்பட்டிருகின்றன.

(4) வேகவதிபாயும் பாண்டியநாட்டின் திலகமாய், தமிழணங்கைச் செல்வமாய் வளர்த்தவிடமாய், பரமசிவன் திருவிளையாடல் பலபுரிந்த ஸ்தலமாய், இக்காலத்திலும் வாணிபத்திலும், கல்வியிலும், செல்வத்திலும் சிறந்தோங்கும் பெரிய நகரமாய் இராநின்ற மதுராபுரியில் தெய்வத்தன்மை விளங்கியிருந்த கடைச்சங்கத்துப் புலவர்களுட்சிறந்தோங்கி கல்விச்செருக்கின் மிகையால் பரமசிவனாகிய இறையனாயனாரையும் உமாபிராட்டியாரையும் இகழ்ந்து பேசிய குற்றத்தினால் பரமசிவன் சாபமேற்பட்டு மிகவும் வருந்தி இளைத்த நக்கீரன சரித்திரத்தைக் கேட்ட பின்னர் தெய்வத்தை யார்தான் இகழ்வார்கள்.

(5) விபூதி ருத்திராட்சம் தரித்தவர்களைப் பார்த்து உத்திராட்சப்பூனைகளென்றும், துவாதச விமம் தரித்தவர்களைக் கேவலம் நாமதாரியென்றும் யந்திரம்போட்டு மந்திரமோதி ரக்ஷாபந்தனம் செய்யும்மாந்திரீகர்களை தந்திரக்காரர்களென்றும், ஆவேசங்கொண்டு குறிசொல்லும் பக்தர்களை பூசாரியென்றும் பலவிதமாக இகழ்ந்து கூறுகிறவர்கள் தெய்வ நிந்தனை செய்யும் குற்றத்திற்கு ஆளாகி தெய்வ அபராதத்திற்குப் பாத்திரர்களாகி அந்தோ வீணில் துன்பசாகரத்துள் தங்களைத்தாமே வீழ்த்திக்கொள்கின்றனர். கடவுள் ஆட்கொள்ளுந் தன்மையைப்பற்றி பரிகாசமாய்ப்பேசி தெய்வத்தை யிகழ்ந்த அந்தணன் தெய்வ பக்தியிற் சிறந்து ஈசுவர ஆராதனையைக் கைக்கொண்ட சம்பவம் ஒன்று சுமார் இருபது வருஷத்திற்கு முந்தி பாண்டிய நாட்டில் நிகழ்ந்துளது.

ஆகவே எவ்விதத்திலும் தெய்வத்தை யிகழொணாது என்று நம் நண்பர்கள் கடைப்பிடித்து ஒழுகும்படி கருணைவாரிதியாகிய கந்தப்பெருமான் திருவருள்புரிவாராக.

என். எஸ். ராமசந்திர ஐயர், B. A.,
வேப்பேரி, மதராஸ்.

ஞானியின் பெருமை

"கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்"

என்று ஸ்வாமி சுந்தரர் சற்றேனுங் கற்றறிவில்லா வேடுவராகிய திண்ணனாரைப்புகழ்ந்து சொல்லியது முறையாமோ வெனின் முறையேயாம். எங்ஙன்?

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
நற்றா டொழாஅ ரெனின்"

என்றார் ஆசிரியர் வள்ளுவனார். ஆதலின் எம்பெருமான்றிருவடி சேருதல் கற்றவர் அடையும் பேறென்க.

நெடுங்காலமாய் வேதங்களை யோதியுணர்ந்த அந்தணாளர்க்கும், கற்பகாலம் அளவற்ற அரியதவங்களைச் செய்யும் முனிபுங்கவர்க்கும் எளிதிற் கிட்ட வரிதாகிய பரமபதத்தை அற்பகாலமாகிய ஆறுநாட்களுக்குள் அடையும் மகான் எத்தன்மைத்தாய கல்வியை யுடைத்தாயிருத்தல் வேண்டும்!

ஆதலின் கண்ணப்பரிடம் கலைமலிந்திருந்த தெனில் தடை சொல்வார் யாவர்?

குறிப்பு: இவ்வுண்மையைப் பேரறிவாளர் பலரும் அறிந்திருப்பினும் எம்போன்ற மாணவருமறியும் பொருட்டு வெளியிடலானேன்.

காரை-ஆ. பசுபதியப்பா, காரமடை.

குறிப்பு—எக்குலத்தில் எந்த ஜாதியிற் பிறந்தவனெனினும் ஞான மடைந்தோன் பிராம்மணனே யென்றும், அத்தகைய துறவியைப் பிராம் மணர் சமபந்தியிலிருத்திப் போசனம் செய்யலா மென்றும் பிரமாண மிருக் கிறது அதற்கு விரோதமாய் நடந்த சிலர் அவமானமுற்ற திருட்டாந்தம் பக்த விஜயத்தில் ஒரு மகானுடைய சரிதையில் கூறப்பட்டிருக்கிறது. சைவ வைணவ சமயாசாரியர்களில் பிராம்மணர்க ளன்றி இழிவானகடைச் சாதியாரும் உண்டு. ஆனல் அவ்வித ஆசாரியர்கள் அவர்களைப் போற்றித் துதித்தே யிருக்கிறார்கள. இக்காலத்திலும் அறிவாளிகள் அவ்வாறே ஒழு கிப் புண்ணியப் பேறடைகின்றனர். சிலரோ, அறிவில்லாத் தன்மையால் ஞானியை ஜாதிக்குற்றம்கூறி யிகழ்கின்றனர். இன்னும் சில மூடர்களும் பாபமூட்டை கட்டிக்கொள்ளும் கர்மிகளும் அப்பர் தாயுமானவர் முதலிய மகான்களின் அருள்வாக்கும் வேதசார மடங்கியவைகளு மாகிய தேவராதி களை "சே! சூத்திரவாக்கு" என்று இகழ்கிறார்கள்.

ஞானியைத் தரிசித்தவன் திரிமூர்த்திகளையும் ஏககாலத்தில் தரிசித்த தற்குச் சமம் என்று வேதம் கோஷிக்கிற தெனின், நாம் இதைப்பற்றி யதிகம் கூறவேண்டுவதில்லை.

பத்திரிகாசிரியர்

ஒற்றுமை.

ஒற்றுமை என்பது சேர்ந்திருத்தல் என்னும் தொழிலைக் காட்டும் பெயர். வஸ்துக்கள், மிருகங்கள், மனிதர்களுங்கூட ஒன்று சேர்ந்திருப் பதற்கு ஒற்றுமை யென்று பெயர் படும். அற்பவஸ்துவாயிருந்தாலும் ஒன்று சேர்வதினல் அடைவது பெருமையே யன்றி ஒரு பொழுதும் தாழ்மை யாகாது. பல துளிகள் சேர்ந்து பெரிய வெள்ளமாகி அநேக நகரங்களை அழிக்கும் வன்மையுடையவை யாதலுமன்றி, ஆறு, நீர்வீழ்ச்சி இவைகளாகி பல யந்திரங்களை யோட்டி அரியசாதனங்களை விளைவிக்கின்றன. இவ்வாறு நிகழ்வது பலதுளிகளின் ஒற்றுமையன்றோ தாவரங்களும் தனித்திருந்தால் அவற்றின்பெருமை அற்பமேயாகிறது. பலமரங்கள் ஒன்றுசேர்ந்தால் தோப் பெனப் பெயர்பெற்றுப் பறவைகளாலும், மிருகங்களாலும், மனிதர்களாலும் மிகவும் விரும்பப்பெற்று எத்தகைய நன்மையை யளிக்கின்றன வென்பதை நாம்நன்கு அறிகிறோம். பல சிறு புரிகளின் தொகுதியே யானையைக்கட்டுவ தற்கும், தேரை இழுப்பதற்கும் உதவுகின்றது. (புரி=கயிறு) இவ்வாறு இவை ஒன்றுசேராமல் தனித்தனியே யிருக்கு மாயின் அப்புரிகளின் பயன் என்பயன் உடைத்து.

மிருகங்களுள்ளும் இத்தகைய ஒற்றுமையின் பெருமையை விளக்கும் கதையில் நான்கு எருதுகளும் ஒன்று சேர்ந்து சிங்கத்தின் வலிமையை யடக்கியதையும், அவைகள் தனித்தனியே பிரிந்து சிங்கத்தால் கொல்லப் பட்டதையும் ஆலோசித்தால், ஒற்றுமையின் பலன் எம்மாண் புடைத்து என்பது தெரியக் கிடக்கின்றது. உணர்ச்சி யற்ற வஸ்துக்களுள்ளும்

பிராணிகளுக்குள்ளும் ஒற்றுமை இத்தகைய நலனை உணர்த்துவதையறிந்த யாம் நம்போன்ற மக்களுள் அவ்வொற்றுமை உணர்த்தும் பயனை பெரிதும் கருதுவோமாக. மனிதர்களுள் சேர்த லென்பது விசேஷமாய் ஒரே வகைப்பட்ட தொழிலை யுடையவர்களிடத்தே அதிகமாய்க் காணப்படுகிறது. கயவரை கயவர் சார்தலும், நல்லோரை நல்லோர் சார்தலும், மாணவரை மாணவர் சார்தலும், மன்னரை மன்னர் சார்தலுமே இயல்புடையனவாகின்றன.

"நற்று மரைக்கயத்து நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றுரைக் கற்றுரே காமுறுவர்-கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்."

என்னும் செய்யுளினால் இதன் விவரம் நன்கு விளங்கலாகும்; தீயாரைத்தீயர் சார்தலால் கெடுதி அதிகரித்தாலும் அவ்வகுப்பிற்கு அக்கெடுதியும் பெருமையளிக்கின்றது. எவ்வாறெனில் கள்வனொருவன் தனியாய்க் களவு புரிதலிலும், பல கள்வர்கள் ஒன்றுகூடித்தீவட்டிக்கொள்ளை, பெருங்கொள்ளை, முதலியவை புரிதல் பெருமை யுடையவன்றே.

"நிலத்தியல்பா னீர்த்திரிந் தற்றாகு மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகு மறிவு."

என்னும் குறளின்படி தான் அடைந்த நிலத்தின் தன்மையை ஜலம் அடைவதுபோல ஒற்றுமையானது தீயோரிடத்தில் சேர்ந்து தீமையை மேற்கொண்டபோதிலும் தீமையினும் வன்மை யுடையதாகின்றது. அப்படியிருக்கச் சான்றோர் இடத்து அவ்வொற்றுமை எவ்வளவு நன்மைபயக்குமென்பதை ஆராய்வோமாக.

"சேர்ந்துவாழ்வதே சிறந்த வலிமை"

ஆங்கிலத்தில் "Union is strength" என்றதொன்மொழியை தம்மக்கட்கு விளக்கிய விருத்தன் சரித்திரத்தை யாம் யாவரும் அறிந்துளோம். அஃதேபோல் பாரதத்தில் கௌரவர்களிடத்து மறுமுறையும் ஸ்ரீகண்ணபிரானைத் தூதனுப்பிச் சில நாடுகளைப் பெற்றுக் கௌரவர்களுடன் சேர்ந்து வாழ எண்ணிய உதிஷ்டிரரிடத்தில் அஃது முறையன்றெனவாதிக்கும் பீமசேனனைத்தடுத்து, மாதவன்

"பிரிவுடன்மற் றிவைகூறும் பவனகுமா ரனைமலர்க்கை பணித்து நோக்கி
குருகுலத்தோர் போரேறே குற்றமது பார்க்குங்கால் சுற்றமில்லை
ஒரு குலத்தில் பிறந்தார்க ளுடன்வாழும் வாழ்வினைப்போ லுறுதி யுண்டோ
இருவருக்கும் வசையன்றோ விருநிலங்கா ரணமாக எதிர்ப்பது"

என்று சொல்லித்தடுத்து ஒன்று சேர்ந்து வாழ்வதின் பெருமையை விளக்கி யிருக்கின்றார். ஆதலின் மாந்தர்களின் ஒற்றுமை வாழ்வு புகழையும் புண்ணியத்தையும் பயக்கும். ஒருவரே ஒரு காரியத்தைத் தனியே யோசித்தற்கும் பலபேர்கள் சேர்ந்து யோசித்தற்கும் விசேஷ மாறுபா டிருக்கின்றது. பலபேர்களின் யோசனைகளில் அறிவு பெருக்கும். நியாயவனியாயம் சுலபமாய் உணரப்படுவதை யுத்தேசித்தே தொன்றுதொட்டு நம்பரதகண்டத்தில் பஞ்சாயநியாய விசாரணையென்னும் பழக்கம்வழங்கி வந்திருக்கிறது. அதற்கேற்ப மாட்சிமை தங்கிய நமது ஆங்

கிலேய துரைத்தனத்தார்களும் ஜில்லா கோர்ட்டுகளில் ஜூரர்களும், அஸெஸ்ஸர்களும், ஹைகோர்ட்டுகளில் எல்லா நியாயாதிபதிகளும் ஒன்று கூடி யாலோசிக்கும் முறையையும் (Full bench system) ஏற்படுத்தி நடத்துகின்றனர். ஆங்கில மன்னர் மன்னரும் இவர் போன்ற மற்ற தேச மன்னர்களும், மந்திரிகள், குடிகள் யாவரும் ஒருங்குசேர்ந்து சபாமண்டபங்களிலமர்ந்து மந்திராலோசனை புரிந்து தேசபரிபாலன சட்டதிட்டங்களை அமைக்கின்றனர். இத்தகைய ஒற்றுமை யோசனையற்ற புராதன நகர பரிபாலனங்களை விட இஃது எவ்விதப் பெருமை அடைகின்றதென்பதை நாம் நன்கறியலாம். நம்போலிய சாதாரண மனிதர்களும் "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்னும் முதுமொழிப்படி ஒன்று சேர்ந்துவாழும் வாழ்க்கையாவும் பெருமையுற்றே யிருக்கின்றன. ஒருவனது சரீரத்தின் அங்கங்களெல்லாம் சேர்ந்து வயிற்றைப் போஷிக்கும் தொழில் ஒற்றுமையற்று அனுபவித்த கதியையாம் படித்துளோமாதலால் ஒற்றுமையென்பதின்றேல் நம்மிடத்தில் வாழ்வதற்கு வழி எட்டுணையேனும் ஏற்படாது. (எள் + துணை = எட்டுணை.)

சர்வேஸ்வரனாகிய கடவுளே ஜீவகோடிகளின் தொகுதி யென்று கூறப்படுவதால் பல மனிதர்கள் ஒன்று கூடினால் கடவுளின் ஓர் அம்ஸத்தின் மாட்சிமையை அடைகிறார்களாதலால், ஒன்று சேர்வதால் அடையும் பெருமை இதனினும் வேறுண்டோ. இப்படியிருக்க உலகத்தில் மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் அறியாமையினால் பிறருடன் சண்டை சச்சரவிட்டு மாறுபாடுபடாமல் ஒற்றுமையாய் வாழவேண்டியதே முக்கிய கடமையாகும். இவ்வழியில் சேர்வதற்கு முன் ஒருவன் தன்னுடற்பிரிவுகளென்னும், மெய், வாய், கண் மூக்கு செவியாகிய பஞ்சேந்திரியங்களின் வழிபட்டு உழலும் அந்தக் கரணங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி வழியில் சென்று தனக்குப் பலதுன்பங்களை யுண்டாக்காவண்ணம் அந்த ஐம்புலன்களை ஒன்றுபடுத்தி நல்வழியில் செலுத்தி வாழ்வதே அறிவாளியின் செய்கையாகும்.

"யோகு" என்னும்பதம், "சேர்தல்" என்னும் பொருளைக்கொடுக்கிறபடியால் பஞ்சேந்திரியங்கள் வழியே ஊடாடும், அந்தக்கரணங்களை ஒருவழிப் படுத்தினவனே யோகியாகின்றான்.

யோகு=சேர்தல். யோகி=சன்னியாசி, இல்லற வாழ்க்கையைத் துறந்தவன். இவன் மனம் அற்ப வழியில் செல்லாமல் திண்ணிய நெஞ்சாகிறது

"எண்ணிய எண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என நாயனார் திருக்குறளில் கூறுகிறபடியே ஐம்புலன்களை அடக்கியாண்ட திண்ணிய நெஞ்சுடையோர் கடலையும் பருகலாம் அண்டத்தையும் தாண்டலாம். ஆதலால் நாமும் கூடுமானவரையில் அந்தக்கரணங்களையடக்கி மனதை ஒரு வழிப்படுத்தி அத்தகைய நற்குண முடையோருடன் பழகி என்றும் அழியாப் பெரும்புகழை எய்தும் வழியை யருளுமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை மனோ வாக்குக் காயங்களால் திரிகரண சுத்தியாய் வழிபடுவோமாக.

திரிகரண சுத்தியாவன=மனம், வாக்கு, காயம் பரிசுத்தமாயிருத்தல்

சுபம்! சுபம்!! சுபம்!!!

எஸ். முத்துவேலு தேசிகர், சீர்காழி.

"நாவல்களை வாசிப்பதால் நன்மையோ தீமையோ?"

தற்காலம் ஒவ்வொரு குக்கிராமங்களிலும் ஒவ்வொரு சங்கம் கிளம்பத் தலைப்படுகின்ற தென்பதைக் கேட்க நம் ஆனந்தனின் தந்தையாகிய மகா-ள-ள-ஸ்ரீ முனிசாமி முதலியாரும், தாயாகிய ஆரணி குப்புசாமி முதலியாரும், நண்பர்களாகிய சந்தாதாரர்களும் சந்தோஷமடைவரென்பது திண்ணம். இதன் கீழ்வரும் உபன்யாசத்தை நோக்கின் சந்தோஷம் மாறி அதற்கு எதிரிடையான துக்கம் உண்டாகுமென்பது விசனிக்கத்தக்கதே. நண்பர்காள்! 19-7-19-ல் அகஸ்மாத்தாய் நாம் ஓர் சங்கத்திற்குச் செல்லும்படி நேரிட்டது. அச்சங்கத்தில் நிகழ்ந்த உபன்யாசத்தைச் செவியுற்றதுமுதல் பகரொணுப் பாடுபடுகின்றது நம் மனம். அவ்வுபன்யாசத்தின் சாராம்சத்தை அவ்வுபன்யாசகர் உபன்யசித்த பிரகாரமே இதனடியில் சிறிது வரைவாம்.

உபன்யாசம்.

"தற்காலம் புதிது புதிதாய் வெளிப் போந்துலாவும் கற்பனைக் கதைகளை (Novels நாவல்ஸ்) வாசிப்பதால் ஆண்பெண் ஆகிய இருபாலரும்கெட்டுப் போகின்றனர். சிறுவர் சிறுமிகளைத் துன்மார்க்கத்திற்றிரும்பச் செய்ய இஃதோர் தூண்டுகோலா யிருக்கின்றது. அதிலும் ஸ்திரீ ஜாதிகள் விசேஷமாய்க் கெட்டுப்போகின்றனர். எவ்வாறெனின், நாவல்களில் பெரும்பாலும் சோரநாயகன் தன் சோரநாயகிக்குக் கடிதம் வரைவதும், சோர நாயகி தன் சோர நாயகனுக்குக் கடிதம் வரைவதும், காதலர் காதலி சம்பாஷிப்பதும், இக்காதலி கருப்பமுறின் அக் கருப்பத்தையழிக்க முயல்வதும், பொய், பொறாமை, வஞ்சகம், சூது, வாது, இததகைய விஷயங்களுமடங்கியிருக்கின்றனவே யன்றி வேறு சத் விஷயங்களில்லை. இத்தகைய விஷயங்களைச் சிறுவர் சிறுமிகள் வாசிக்கின் மேற்கூறிய தீய குணங்களே யமைகின்றன. அநேகர் இந்நாவல்களால் தத்தம் பதியை யிழந்து பரதவித்து மிருக்கின்றனர். ஆகையால் இத்தகைய நாவல்களை நமது சங்கத்தின் அங்கத்தினர்களும், நமது நண்பர்களும் இனி வரவழைத்தல் கூடாது, பார்க்கவும் கூடாது" என உபன்யாசகர் தமக்குத் தெரிந்தவரையில் நாவல்களிலுள்ள தோஷங்களை யெல்லாம் சாங்கோப சங்கமாய் உபன்யாசித்தனர்.

நண்பர்காள்! என்னே இவர் தம் கூற்று! என்னே இவர் தம் மதி! இவ்வுபன்யாசத்தைக் கேட்கக் கேட்க தாமரை யிலை நீர்போற் றத்தளித்தது என்மனம். ஆயினும் அச்சந்தர்ப்பம் நாம் இடம், காலம், பேதம் என்பதை அனுசரிக்கலாயிற்று.

சகோதர சகோதரிகளாகிய சந்தாநேயர்களே! நம் ஆனந்தனின் சந்தாதாரராகிய இவ்வுபன்யாசகர் நாவல்களிலுள்ள தோஷங்களைச் சாங்கோபசங்கமாய் எடுத்தியம்பினரேயன்றி அதிலுள்ள குணங்களை எடுத்தியம்பினரல்லர். இன்னோர் (தான் கெட்ட குரங்கு வனத்தையும் அழித்ததாம் என்ற பழமொழிக்கிணங்க.) தாங்கள் கெடுகிறதுமன்றி பிறரையும் கெடச் செய்கின்றனரென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோற் றெற்றென விளங்குகின்றதன்றோ? அங்ஙனம் இவ்வுபன்யாசகர் கூறியவரையில் நாவல் வாசிப்பதால் தீமையா? அல்லது நன்மையா? என்பதைப்பற்றி ஈண்டு சிறிது வரைவாம்.

இப்பூவுலகின்கண் மானிடராய்ச் சனித்த நம் ஒவ்வொருவருக்கும் நன்மையிது தீமையிது, பாவமிது புண்ணியமிது எனப் பகுத்தறியும் சக்தியை ஏற்கனவே கடவுள் அளித்திருக்கின்றனர். நாம் நமது பகுத்தறிவைக் கொண்டு நம்மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி நடத்தல் வேண்டும். மேற்கூறிய உபன்யாசகர் நாவல்களில் பெரும்பாலும் கள்ளக் கடிதம, கள்ளக் கையொப்பம், சோரம், பொய், வஞ்சகம், சூது, வாது முதலிய, இத்தகையவிஷயங்கள் நிறைந்திருக்கின்றன வென்றும் இவற்றை வாசக்கின் நமக்கும் இத்த குணங்களமைகின்றனவென்றும் கூறுகின்றனர். அந்தோ! இப்படியும உபனயாசம் செய்வாருண்டோ? காதலன் காதலி முதலில் ஒருவர்கொருவர் கள்ளககடிதங்கள் வரைந்து எத்தகைய சந்தோஷத்தை யனுபவிக்கினும பின்னர் எக்கதியடைகின்றன ரென்பதைக் கவனிக்கவேண்டாமா? களளக கையொப்பமிடுகின்றவர் சோரம் செய்கின்றவர், பொய் பேசுகின்றவர், வஞ்சனை, வாது, சூது செய்கின்றவர், இததகையோர்கடைசியில எக்கதியடைகின்றனரென்பதை நம உபனயாச நணபர் கவனிக்கவில்லைபோலும். கவனித்திருப்பின் எங்கணும் நிறைந்துள இறைவனாகிய கருணாகரக் கடவுள் ஒருவர் இருக்கின்றார், அவர் அவனவன் செய்யும நன்மை தீமைக்குத் தக்கபலனையே யளிக்கின்றார், என்ற உண்மை இதனால் நிரூபிககப்படுகிறதென்றுணர்ந்திருப்பார். மேலும் அவர்,

“நன்மை செய்கின்றவன் முதலில் எத்தகைய கஷ்டங்களை யனுபவிக்கினும் கடைசியில் சுகப்படுகின்றதுமன்றி யாவராலும் புகழப்படுகின்றான்; தீமை செய்கின்றவன் முதலில் எத்தகைய சந்தோஷத்தை யனுபவிக்கினும் கடைசியில் கஷ்டப்படுகின்றது மன்றி யாவராலும் இகழப்படுகின்றான. ஆகையால் நாம் இதில் எஃதச் செய்தல் வேண்டும்? நன்மையைச் செய்தல் வேண்டும், தீமையைச் செய்தல் கூடாது என நாவல்கள் போதிக்கின்றன” என்று உபன்யசித்திருப்பர்.

நண்பர்காள்! மகா-ாா-ாா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களியற்றியுள்ள நாவல்களிலொன்றாகிய கற்கோட்டை என்னும் நாவல் நம் ஆனந்தனில் மாதம்மாதம் பிரசுரமாகிவருகின்றதன்றோ? அந்நாவலிலுள்ள விஷயங்களின் குணங்களை ஈண்டு சிறிது சுருக்கி வரைந்து இவ்வியாசத்தை முடிப்பாம்.

(1) கண்ணபிரான் பிரபு, திரவியசிங்கம் பிரபு, விக்ரமசிங்கம் பிரபு இன்னோர் மூர்க்க இராணியால் அநியாயமாய் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டு எத்தகைய இடர்கடகெல்லாம தப்பிப் பிழைத்து எத்தகைய கஷ்டங்களை யனுபவித்த காலத்தும், தீமைசெய்தவர்கட்கு நன்மையே செய்தும், எத்தகைய இன்னல்களை யனுபவித்த காலத்தும் பகவத்தியானத்தை மறவாமலிருந்தும் கடைசியில் எவ்வளவோ சுகங்களை யனுபவித்ததுமன்றி யாவராலும் புகழ்தற்குரிய அரும் பெருங் கீர்த்தியடைந்தனர். நண்பர்காள்! நாம் இதில் கிரகித்துக்கொள்ள வேண்டியது என்ன? கமலாபாய் இராணி மேற்கூறிய பிரபுக்களுக்கு எத்தகைய தீங்கு செய்யினும் அன்னோர் எப்படி இராணிக்கு நன்மையையே செய்து வந்தார்களோ, அதுபோல் பிறர் நமக்குத் தீங்கு செய்யினும் நாம் அவர்கட்கு நன்மையே செய்தல் வேண்டும். (இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண — நன்னயஞ் செய்துவிடல்.)

கண்ணபிரான் பிரபு எத்தகைய கஷ்டங்களை யனுபவித்தகாலத்தும் எப்படி பகவத்தியானத்தை மறந்திலரோ, அதுபோல் நமக்கு எத்தகைய கஷ்டங்கள் வந்துற்றகாலத்தும் நாம் பகவானை மறவாதிருத்தல் வேண்டும் (கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.)

கற்கோட்டைக் கதிபதியான செல்வராயரின் புதல்வியாகிய கமலாம்பாள் கண்ணபிரான்மீது காதலுற்று அன்னோனைத் தன்னிஷ்டப்படி மணஞ்செய்துகொள்ள முடியாமல் எத்தனையோ துஷ்டர்களிடம சிக்கியும், எத்தனையோ ஆபத்துகளில் அகப்பட்டும், தன் பிராணன் நீங்கும் காலத்தும் தன் கற்பு என்னும் மாணிக்கத்தை பரபுருஷர்களாகிய கள்ளர்களிடமீயாமல் அதனைக் காப்பாற்றி அக்கற்பென்னும் மாணிக்கத்திற்குரியவனாகிய கண்ணபிரானிடமே யீந்து பின்னர் சுகப்பட்டாளன்றோ.

இதனால் நாம் அறிந்து கொள்ளவேண்டியது என்ன? கமலாம்பாள் தன் உயிர் நீங்கும் காலத்தும் எப்படித் தன் கற்பு நிலை தவறாமலும் தான் கண்ணபிரானுக்குக் கொடுத்த வாக்குத் தவறாமலு மிருந்தனளோ, அதுபோல் நம் சகோதரிகள் ஒவ்வொருவரும் தத்தம் உயிர் நீங்கும் காலத்தும் தத்தம் கற்பு நிலைதவறாமலும் சொற்றவறாமலு மிருக்கவேண்டு மென்பது நன்கு விளங்குகின்றதன்றோ? (கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை)

கமலாபாய் இராணி தான் சோரஞ்செய்து பெற்ற குழவியை எவ்வளவு இரகசியமாய் மறைத்துவைத்திருந்தும் அத்தீய இரகசியம் கடைசியில் பகிரங்க மாகிவிட்ட தன்றோ? மேற்கூறிய இராணிக்கு குற்றம் செய்தவர்களைச் சிறையிலடைப்பிக்கவும், தூக்குத் தண்டனை கொடுக்கவும் அதிகாரமிருக்கத் தன் துர்நடவடிக்கையால் பிறருக்குக் கீழ்ப்படியவும், அந்நடவடிக்கைகள் பின்னர் வெளிவந்துலாவி அதனால் அவள் பெரிய அபகீர்த்திக்குள்ளாகவும் நேர்ந்துவிட்டது. சோதரி சோதரர்களே! நாம் இதனால் தெரிந்துகொள்ளவேண்டிய தென்னவெனில், எத்தகைய இரகசியங்களாயினும் நாளடைவில் அஃது வெளியாகி விடுமென்பது உண்மை. (பலநாளைய திருடன் ஒரு நாளைக்ககப்படுவான்.) தவிர நாம் எத்தகைய அதிகாரம் பெற்றிருப்பினும் தீய வழியில் ஒழுகாமல் நற்குண நற்செய்கைகளைக் கைப்பற்ற வேண்டுமென்பதையும் உணருகிறோமல்லவா? அதிலும் துப்பறியும் நாவல்களை வாசிக்கின் நம்புத்தி எத்தகைய தீக்ஷண்யமடைகின்ற தென்பது துப்பறியும் நாவல்கள் வாசித்தவர்கட்கே தெரியும். விரிக்கிற் பெருகும்; விரிவஞ்சி விடுத்தாம். இத்தகைய நாவல்களை வாசித்து வாசித்து சிலர் தாமே நாவலியற்று கின்றனர். இயற்றியு மிருக்கின்றனர். திருஷ்டாந்தமாக நாம் சின்னாட்களுக்கு முன் சரஸ்வதி வாசகசாலை என்று ஒன்று ஸ்தாபித்திருந்தோம். அதற்குச் சிற்சில துப்பறியும் நாவல்களும், மற்ற இதர நாவல்களும் வரவழைத்திருந்தோம். அந்நாவல்களை வாசிக்க வாசிக்க நம்புத்தி கிஞ்சித்து பிரகாசமடைந்து தற்காலம் (சுவர்ணாம்புஜம்) என்னும் ஓர் நாவலியற்றி யுள்ளோம்.

எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக. சுபம், சுபம்.

E. V. துப்புசாமி முதலி,
எழூர். (ராசீபுரம் தாலூகா.)

குறிப்பு:—இக்காலத்தில் பலவிதமான நாவல்கள் மலிந்துகிடப்பதும், கற்றோரும் கல்லாரும் யாவருமே நாவல்கள் எழுதி வெளியிடுவதும், சிலர் அன்னியரிடம் நாவல் எழுதி வாங்கிக் கொண்டு கௌரவத்தைக் கருதித்

தாங்களே யியற்றியதாக அவற்றை வெளியிடுவதும் யாவரும் மறிந்த விஷயமே. சில நாவல்களில் மேற்கண்ட பிரசங்கியார் கூறியதுபோல் ஆபாசமான நடவடிக்கைகளைப் பற்றி கூறப்பட்டிருப்பதும் உண்மையே. அத்தகைய ஆபாசங்களே நிறைந்துள்ள நாவல்களை வாசிப்பது தகாதுதான். ஆனால் அத்தகைய நாவல்கள் மிகச்சிலவே.

ஆயினும் பிரசங்கியார் எல்லா நாவல்களிலும் அத்தகைய கெட்ட விஷயங்களே யடங்கியிருக்கின்றன வென்றும், அவற்றை வாசித்து மாதர்களெல்லாம் கெட்டுப் போகிறார்களென்றும் கூறியது அனுபவத்திற்கு முற்றும் மாறான சங்கதியே. இக்காலத்தில் நமது தாய்ப்பாஷையில் வசனநூல்கள் அதிகமாய்ப் பெருகவேண்டு மென்பது அறிவாளிகளின் கருத்து. அதற்குத் தக்க காரணங்களிருக்கின்றன. வசன நூல்களிலேனும் வேறெந்த நூல்களிலேனும் வெறும் நீதிகள், புத்திமதிகள், இத்தகைய விஷயங்கள் மட்டுமே யடங்கியிருந்தால், அவற்றை வாசிப்போர்க்கு இனிமையும் உற்சாகமும் உண்டாகா. அதோடு விஷயங்களும் நன்றாய் மனதிற்பதியா. இதனாலேயே முன்னோர்களும் அத்தகைய நல்ல விஷயங்களைப் புராணங்கள் இதிகாசங்கள் முதலிய சரித்திர வாயில்களாகவே திருஷ்டாந்தாங்களோடு போதித்திருக்கிறார்கள்.

நாவல்கள் எல்லா ஜாதியாராலும், எல்லா மதத்தினராலும், எல்லா தேசத்தினராலும் வாசிக்கத் தக்கவை. துரைத்தனத்தார் நாவல்களைப் பாடசாலைகளில் மாணவர்களுக்குப் பாட புத்தகங்களி லொன்றாக ஏற்பாடு செய்கிறார்கள். இதனால் ஆபாச விஷயங்களடங்கிய நூல்கள் எவையாயினும் கண்டிக்கப்படுகின்றன.

நாவல்களில் நல்லநடக்கைகள் கெட்டநடக்கைகள் இரண்டும் அடங்கியிராவிட்டால் நீதிகள், ஆசாரங்கள், புத்திமதிகள் முதலியவைகளைப் போதிக்க அவை பயன்படமாட்டா. "வெயிலில் சென்றவனுக்குத்தான் நிழலினருமை தெரியும்" என்ற பழமொழிபோல் கெட்டநடக்கையால் நேரிடும் தீமைகளை யுணர்ந்தால்தான், நல்ல நடக்கையால் உண்டாகும் நன்மைகளின் பெருமை நன்கு மனதிற்படுவதோடு, கெட்ட நடக்கைக்கு அஞ்சி அதில் பிரவேசியாதிருக்க வைராக்கிய முண்டாகும். கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகிலேயே நல்லதும் கெட்டதும் யாவற்றிலும் கலந்தே யிருக்கின்றன. ஒரு கள்ளன் பிடிக்கப்பட்டு தண்டனை யடையும் போது, அக்காட்சியைக் காண்போர் அவனையும் அவன் நடக்கையையும் வெறுத்துத்தூஷித்து "சேசே பட்டினி யிருப்பதாயினும் பிச்சை வாங்கி யாவதுவயிற்றை வளர்க்கலாமே யன்றி இக்களவு வேலைமட்டும் கூடாது" என்றுகூறிக்கொள்கிறார்களே யன்றி "பேஷ் நாமும் இவனைப்போல் திருட வேண்டும்" என்று யாவரும் கருதிக் கெட்டுப் போவார்கள் என்று நினைப்பது அறியாமையாகிய பெருந்தவறே யாகும்.

நாவல்களில் நல்ல புத்திமதிகள் அடங்கியிருக்கின்றன வென்றும் மாதர்கள் அறிந்து ஒழுக வேண்டிய கற்பு முறைமைகள் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன வாதலின் ஒவ்வொரு குடும்பத்திலும் இத்தகைய நூல்கள் வாசிக்கப்பட வேண்டுமென்றும் எத்தனையோ கற்றறிந்த அறிவாளிகள் அனேகம் நாவல்களுக்கு மதிப்புரை யளித்திருக்கின்றனர். மேற்படி விஷயத்தை யனுப்பிய நமது சந்தா நேயர் ம-ா-ா-ஸ்ரீ, E. V. துப்புசாமி முதலியார். அவர்கள் நாவல்களில் நல்ல நடக்கைகள் தீய நடக்கைகள்

இரண்டும் கலந்திருப்பதனால் நல்ல பயனே யுண்டாகிற தென்று ஒரு நாவலைத் திருட்டாந்தம் காட்டி விளக்கியிருப்பதால் அதைப்பற்றி நாம் இன்னும் விரிவாய்க் கூறவேண்டியதில்லை.

மேற்கண்ட உண்மைகளை யுணராக்குறையால் (துரியன் ஊர் முழுதும் உள்ள யாவரும் கபடர் வஞ்சகர் கள்ளர்களே யன்றி யோக்கியன் ஒருவனுமே யில்லை யென்று கூறியதுபோல்,) மேற்கண்ட பிரசங்கியார் நாவல்களை வாசிப்பதால் யாவரும் கெட்டுப்போகிறார்களென்று யாவர்க்கும் தவறான அபிப்பிராய முண்டாகும்படி ஒருசபையிற் கூறியது மிக்க விசனிக்கத்தக்க விஷயமே. அவர் நமது சந்தாதாரரில் ஒருவராயிருந்து இவ்வாறு பேசியது நம்மனதிற்குப் பின்னும் வேதனையை யுண்டாக்குகிறது. ஆயினும் இப்போது நாவல்களால் நற்பயனே யுண்டாகிற தென்பதும், நமது தாய்ப்பாஷையின் அபிவிருத்தியையும் நம் தாய்நாட்டாரின் க்ஷேமாபிவிர்த்தியையும் கோரியே அனேகம் நாவல்கள் வரையப்படுகின்றன வென்பதுமாகிய உண்மையை யறிந்தவர்களே பெரும்பாலராயுளர். ஆதலின் நமது பிரசங்கியாரின் தவறு கெடுதியையுண்டாக்கும் ஆற்றலுடையதாகாதென்றே நம்புகிறோம். ஆண்டவன் அருள்புரிவாராக.

பத்திரிகாசிரியர்

நித்தியவிதி—போஜனம்

இரவு

(14-ம் பக்கத்தொடர்ச்சி)

பகற் காலத்துக்குரியவிதிகளை எமக்கெட்டியவரை ஒரு சிறிதே கூறினும், இனி இரவிற்குரியவற்றிற் சிறிது கூறுவாம். நமது முன்னோர்கள் ஒருதினத்தையே ஒருவருஷமாகக்கொண்டு பகலை உத்தராயணமென்றும் இரவைத் தக்ஷிணாயன மென்றும் கூறுவர். அன்றியும் ஒருதினத்தை ஐந்து பாகமாக்கிச் சிருஷ்டி, திதி, ஸம்ஹாரம், திரோபவம், அனுக்கிரகம் என்கிற பஞ்சகிருத்திய காலங்களாகவும் கொள்வர். உத்தராயண மாகிய பகற் காலத்துக்குச் சூரியனை அதிதேவதையாகவும், இரவுக்குச்சந்திரன் அல்லது பிதிர்க்களை அதி தெய்வமாகவுங் கூறுவர். இனி விடியற் காலமும் காலையும் சிருஷ்டி காலமாம். ஏனெனில் அக்காலத்தில் அவ்வத்தினங்களுக்குரிய வஸ்துக்கள் சேகரிக்கப்படுகிறன்றன வாதலால் அதுவே சிருஷ்டிகாலமாயிற்று. முற்பகலும் நடுப்பகலும் ஸ்திதிகாலமாம். சேகரிக்கப்பட்ட பதார்த்தங்களெல்லாம் அப்பொழுது அனுபவிக்கப்படுகின்றன. பிற்பகலும் மாலைக்காலமும் ஸம்ஹாரகாலமாம். சேகரித்தனுபவித்தவை உபஸம்ஹரிக்கப்படுதலால் (ஜீரணித்தலாலெனினுமாம்) என்க. இரவுமுதற்காலமாகிய முன்னிரவு திரோபவகாலமாம். இருளினால் எல்லாம் மறைக்கப்படுதலாலென்க. நள்ளிருட்போது அனுக்கிரககாலமாம். அப்பொழுது சகல ஜீவாத்மாக்களும் சுஷுப்தியையடைந்து ஆனந்த சுகத்தை அடைதலால். இவ்வாறு தினரூபனாகிய காலபுருஷன் பஞ்சகிருத்தியங்களையும் நடத்தி வருகிறானென்று வைதிகநூல்கள் கூறுகின்றன. கற்றுணர்ந்தபெரியோரும் இவ்வாறே கூறுகின்றனர். அவஸ்தாத்திரயங்களு மிவ்வாறே பகுக்கப்படுகின்றன. உதயமுதல் அஸ்தமன பரியந்தம் கால புருஷனுக்கு ஜாக்கிரதா

வஸ்தையாம். முன்னிரவு (இரவு முற்சாமம்) சொற்பன வஸ்தையாம். நள்ளிரவு சுஷுப்தியவஸ்தையாம் என்றும் நூல்கள் வகுத்திருக்கின்றன.

காலையில் பிரம்மமுகூர்த்தத்திற் கடுத்தகாலம் ரௌத்திரம் என்னப்படும். ரௌத்திரமென்றால் ருத்திரனுக்குரிய காலமென்பது: இச்சமையங்களில் ஸ்ரீ பரமேசுவரன் ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளுவாரென்று சைவாகமபுராணங்கள் கூறுகின்றன. இருகாலங்களிலும் இந்த ரௌத்திர முகூர்த்தகாலமே சந்தியாவந்தனாதி வைதிக கர்மங்கள் செய்யப்படுகின்றன. காலையிற் பலகன்மங்கள் விதிக்கப்பட்டன. மாலையிற் பிரதோஷ காலமாகிய ரௌத்திர முகூர்த்தத்தில் சந்தியாவந்தனமொன்றே விதிக்கப்பட்டுள்ளது. சந்தியா வந்தனத்தாற் சேவிக்கப்படுகிற தேவன் சூரியனேயாம். அதனால் அவனிடத்தில் அந்தர்யாமியாயுள்ள பாப்பிரமத்தைச் சேவித்ததாகும். அதனாற்றான் சூரியனைப்பஞ்சப்பிரம சொரூபனென்று வைதிக நூல்கள் கூறுகின்றன.

இனிக்காலைச் சூரியோதயக் காலத்தில் சரீரத்திலுள்ள சிறிய அக்கினியும், மிகுந்த குளிரும், சொற்பப்பித்தமு முண்டாயிருக்கும். மத்தியான்ன காலத்தில் பித்தம் பூர்ணமாகவே நிறைந்திருக்கும். அதனாலேயே நடுப்பகலில் பசிதாகங்கள் மிகுகின்றன. இவையெல்லாம் சூரியகிரண உஷ்ணத்தாலுண்டாகின்றன. மாலையில் சூரியகிரணம் குறைகின்றது. அது குறையவே சந்திரனுக்குரிய சீதளம் மிகுகின்றது. அதனால் வாதமும் மேலிடுகின்றது. மாலையிற் சூரியோபாசனையாகிய சந்தியாவந்தனத்தினால் சூரிய கிரணம் சரீரத்திலாகருஷிக்கப் படுகின்றது. அதனால் சரீரத்துக்கு மிகுந்த ஆரோக்கிய முண்டாகும் என்றும், இரவிலுண்டாகும் சீதவாதங்களின் உக்கிரம் சிறிது தணிக்கப்படுமென்றும் பெரியோர் கூறுகின்றனர். வைத்திய சாஸ்திரங்களிலும் காலை வெயில் பித்தத்தையுண்டாக்கி வியாதிகளுக்குக் காரணமாகும் என்றும், மாலைவெய்யில் சகலவியாதிகளையும் போக்கிச் சரீரத்துக் காரோக்கிய முண்டாக்குமென்றும் கூறப்பட்டுள்ளது. இந்த விதியை வைதிகநூல்கள் பிரம்மத்தியானசொரூபமாகிய சந்தியாவந்தனானுஷ்டானத்துடன் சேர்த்து அனுஷ்டிக்க விதித்தன. சூரியன் மறைந்து அதன் விளிம்பு கண்ணுக்குத் தோன்றுகிற காலமேசந்தியாவந்தனத்துக் குரியகாலமாம். அதற்குமேல் நட்சத்திரங்கள் தோன்றுகிறபரியந்தம் தத்தமக்குக் குரு முகமாய்க் கிடைத்த தெய்வமந்திர தியானமும், துவிஜர்களுக்குக் காயத்திரி மஹாமந்திரத்தியானமும் விதிக்கப்பட்டன.

இதனால் மாலைக்காலமாகிய பிரதோஷகாலமே சகலவைதீக கன்மங்களுக்கும் ஆரம்பகாலமாக விதிக்கப்பட்டது. உபநயனம் பகற்காலத்திற் செய்யப்படுவதாயினும் பிரதானமாகிய காயத்திரி உபாசனை மாலையிலேயே தொடங்கப்படுகிறது. கிருகஸ்தாச்சிரமத்தில் பிரவேசித்த கிருகஸ்தனும் அவ்வாசிரமத்துக்குப் பிரதானமான ஔபாசன கன்மத்தை பகற்காலத்திலேயே யாரம்பஞ் செய்கிறான். அக்கினியாதானம் முதலிய யாகங்களுக்கு முக்கியாங்கமான அக்கினிஹோத்திரமும் இக்காலத்திலேயே யாரம்பிக்கப்படுன்றது. ஸோமயாகதீக்ஷையும் இக்காலத்திலேதான் ஆரம்பமாகிறது. விரதாங்கங்களாகிற பிரதிமாபூஜையும், ஆகமசம்பந்தமான யாகங்களும் இக்காலத்திலேயே ஆரம்பம் செய்யப்படுகின்றன. ஆதலால் சகல கன்மங்களையும் செய்யத்தக்க ஆலோசனை புத்திதெள்வு இவையெல்லாம் மாலைக்காலத்திலேயே உண்டாமென்பது வைதீகமார்க்கத்தார் கண்ட துணிபு.

சூரியன் உதித்ததும் இரவில் களையாறிய புலன்கள் தத்தம் தொழில்களைச் செய்ய முயலுகின்றன. அப்போது மனம் புலன்கடோறும் சென்று திரிகின்றது. ஏனெனில் புலன்கள் மனதைத் தம்வசப்படுத்தி அலைக்கின்றன. அதனால மனம் நிலையற்றதாகிச் சதா அலைந்து ஒரு நிலையில் நில்லாது அலைந்துகொண்டேயிருக்கின்றது. சூரியகிரண வலிகுன்றவே புலன்களும் சோர்வடைகின்றன. அதனால் மனதையியக்கும் சக்தியவற்றுக்குக்குறைகின்றது. அப்போது மனம் அலையாமல் ஒரு நிலையில் நிற்கும். ஆதலால் மனதையடக்கவிரும்புவோர்க்கு இதுவே நல்லதருணம். ஆதலாற்பிரம தியானத்திற்கு மாலைக்காலமே சிலாக்கியமுடையதென்ற கருத்தினாலேயே சகல வைதீக கன்மங்களும் அப்போது ஆரம்பிக்கப்படுகின்றன. இதேமாதிரியாகத் தூக்கத்தினின்றும் விழித்தவுடனே மனம் புலன்வழிச்செல்லாமல் தன்னிலையில் நிற்குமாதலால் விடியற்காலமும் ஜபதபாதிகளுக்கு யோக்கியமுடையதாகின்றது. ஆதலால் மனதை யடக்கி யாளவிரும்புவோர் இரண்டு சந்தியாகாலங்களிலும் சூரியாந்தர்யாமியாகிய பரப்பிரம்மத்தை யாராதிக்கின்றனர். மாலைக்காலமுதல் விடிகிறபரியந்தம் புலன்கள் ஒடுங்கிநிற்றலால் அப்போது மனதை ஒருவன் தன்னிஷ்டம்போல நடத்தலாம். மாலைக்காலத்தில் புலன்களோடு சம்பந்தியாது தனித்து மனதைப்பிரம்மதியானத்தில் செலுத்தி நித்திரை கொள்ளும்மட்டும் வேறு சிந்தனையின்றி நித்திரை செய்வானானால், அந்தமனம் சுஷுப்தி அவஸ்தையில் பிரமத்தியானத்துடனொடுங்கி, நித்திரைதெளிந்து எழுந்திருக்கும்போதும் அதே சிந்தனையுடனெழும். இதனால் ஓரிரவுமுழுமையும மனமடங்கி யிருக்கும் தன்மையடைகின்றது. மனம் எந்த எண்ணத்துடன் சுஷுப்தியில் ஒடுங்குகின்றதோ அதே எண்ணத்துடனஜாக்கிராவஸ்தையை அடையுமென்பது ஆன்றோர் அறிந்த அனுபவமாகிய உண்மை. இதையனுசரித்தே ஒருஜன்மத்தில் மரணமடைந்தஜீவன் எந்த எண்ணத்துடன் பிராணனைவிட்டு மஹாசுஷுப்தியை அடைகின்றதோ அதேஎண்ணத்துடன் மறுஜனனமெடுக்கும் எனபது வேதத்தின் கருத்தும், வேதமுணர்ந்த வித்தகர் கருத்துமாம். இதனையே பூர்வவாசனை யென்று நூல்கள கூறுகின்றன. இது விரிக்கிற் பெருகுமாதலால் இம்மட்டில் நிறுத்தி மேற் பிரகிருதத்தைக் கவனிப்போம.

இக்காரணம் பற்றியே தேவாலயங்களிலும் உற்சவம் ஆராதனை முதலியன இரவிலேயே விசேஷமாய் நடத்தப்படுகின்றன. நூலகளும் ஆலய தரிசன விசேஷம் கூறுமிடத்து மத்தியான்னத்தில் தரிசிப்பதை விட மாலைக்காலதரிசனம் அதிகபலன தருமென்றும், இரவு இரண்டாங்கால தரிசனம் அதைவிடப் பன்மடங்கு தருமென்றும், அர்த்தஜாம தரிசனபலன் அளவிடற்கரியதென்றும் கூறுகின்றன. யோகிகளும் இரவிலேயே நிஷ்டையை அதிகமாய் நடத்துகின்றனர். பக்தியோகக் காரர்களும் மந்திர யோகக்காரர்களும் இரவிலேயே விசேஷமாய்த் தங்கள் சாதனையைநடத்துகின்றனர். இவற்றுக்கெல்லாம் காரணம மனம் புலன்களிற் சம்பந்தியாமல் தனித்தியங்கும் ஆற்றல் பெறுகின்றமையேயாம். இராக்காலம் நன்மைக்கு எவ்வளவு சாதகமாகின்றதோ அவ்வளவு சாதகம் தீமைக்கு மாகின்றது. ஆராயுங்கால் பூதப்பிரேத பிசாசங்கள் சஞ்சரிக்கவும், அரக்கர் அசுரர் உலாவவும், பிராணிகளை யிம்சிக்கும் துஷ்டஜந்துக்கள் நடமாடுவதற்கும், இரவு தகுந்த காலமாம். மதுவருந்துவதற்கும், விபசரிப்பதற்கும், திருடுவதற்கும், கொலையாதிமஹாபாதக உபபாதகங்கள் செய்வதற்கும் இரவு இடந்தருகின்றது. இருட்டினிற்பொருள்களைக் காணக்கூடாமையால் அநேக சிறிய பிராணிகளை மிதித்துக் கொல்வதற்கும் காலமாகின்றது. இதனால் இரவில்

பாபங்களும பகலைவிட அதிகமாகச் செய்யப்படுகின்றன. இது கூறிய தெற்றுக்கோவெனிற் பாப காரியங்களில சிந்தையைச செலுத்தாமல் தெய்வ தியானத்திலேயே மனதைச் செலுத்தவேண்டு மென்பதற்காகவே.

மனமானது புலன்களின் வழியே பொருள்களிடத்திற் சம்பந்தப்படாமல் ஒருகணப்போதுகூடநில்லாது என்பது பிரத்தியட்சம். ஏதேனும் ஒன்றைப் பற்றியே நிற்பதே மனதின் இயற்கை. வேறொரு பொருளையும் பற்றாது நிற்கும் இவ்விரவு காலத்தில் அதற்கொரு பற்றுக்கோடு வேண்டும். தான் வழிபடும் தெய்வத்தின் திருவடிகளில் நிறுத்தினால் அம்மனம் அதையேபற்றி நிற்கும். ஆதல்பற்றியே இராக்காலத்தை அதிகமாகப் புகழ்ந்தன நூல்கள். இவையெல்லாம் இகபரசாதன நெறிபற்றிச சென்று மோட்சானந்தத்தை அனுபவிக்கவிரும்பும் மஹாத்மாக்களை உத்தேசித்தே நூல்கள் விரித்துக்கூறின.

இன்னும்வரும்.
சீவானந்தசாகர யோகீஸ்வரர்.

வாழ்த்துபாட்டு.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

(1) அலர்தலைமா நிலவிருளை யகற்றுவிக்க வருமனலி
யன்ன வேநந்
நலமிகுமாச் சென்னைநகர் முனுசாமி யெனுஞ்சுமுக
நண்பன் றோன்றி
பலபொழுதா ராய்ந்துமனத் தோடுறவா டிச்சமயம்
பண்பாய்த் தேடிச்
சொலமுடியா தரியபெருங் காரியத்திற் றொடர்ந்துலகஞ்
சுகிக்க வேண்டி.

(2) பத்திரிகா சிரியனெனும் பாரமதைத் தான்றாங்கிப்
பரிந்தே நம்மோர்க்
கெத்திரிபா னாலுமலை யாதெளிதிற் றெரிதியுமென்
றியம்பு மாறு
பத்திமுத லியநான்கும் பரவியபுத் தகரூபம்
பதித்தொவ் வோர்மா
தத்துமுத வித்தமிழ தோகதியில் வீழாமற்
றடுத்தாட் கொண்டு.

(3) தன்னலமற் றயனலமுங் கருதிநறுந் தமிட்பயிர்க
டழைத்து மென்மே
லுன்னதத்தைப் பெறவைத்தா னதுவோங்கி மேனாட்டை
யுற்று வுற்றுச்
சொன்னலமும் பொருணலமுஞ் சுவைநலமும் பொருந் திமிகுஞ்
சோதி யோடும்
எந்நலமுங் கரத்தேந்தி யானந்த போதினியா
யெழும்பிற் றம்மா.

(4) ராக்ஷஸவா டிச்சசியி லுற்பவித்த மாதிவட்கு
நான்கா மாண்டு
ஆச்சுவய தைந்திதிலின் னரியமொழி பேசவரு
மணியே போல
நாச்சகல மும்பழகிக் குதலைமொழி யுந்தழுவி
நாலா னூலா
ராய்ச்சிதரு நாமுமினித் துயிலாதா ராய்ச்சிசெய்து
நலங்கொள் வோமே.

(5) பாற்கடலிற் சுரந்தமுதந் தனையெடுத்துத் தேவர்கட்குப்
படைத்த மாலே
போற்றருமந் தவநிலைமை போஜனமா ணவர்விதியுட்
புறத்திற் கொண்டு
மேற்கவசம் பச்சையுடன் றேன்றலினன் மேலவனை
விளித்தொப் பிட்டோம்
எற்குதியா னந்தியையென் றேவுமுனி சாமியுன்றன்
இனிமை யென்னே.

எ. சுந்தரம் பிள்ளை,
உபாத்தியாயர், பாண்டமங்கலம்.

மாணவர்பக்கம்

சில எச்சரிக்கைகள்

மாணவர்களாகிய நமது அரிய நண்பர்களுக்கு இரண்டொரு விஷயங்களைப்பற்றிக் கூற நாம் பிரியப்படுகிறோம். ஒரு சமயம் "ஆ! இது யாருக்குத்தான் தெரியாது. இதைத்தானா இவ்வளவு பிரமாதமாய்க் கூறினர்?" என்று சிலர் கருதலாகும். ஆயினும் சற்று சிந்தித்துப்பார்த்தால், தெரிந்த விஷயத்தைப்பற்றிக்கூட நமக்கு சமயத்தில் அதன் அருமை தெரியாததால் அதை யலட்சியம் செய்து பிறகு கஷ்டத்தில் சிக்கித் தத்தளிக்கும்போது, அய்யோ அப்போது அதை யலட்சியம் செய்துவிட்டதா லல்லவோ இப்போது இப்படிக் கஷ்டப்படுகிறோம் என்றும், துக்கிக்கின்றோம் என்றும், காரியம் மிஞ்சி சமயம்போய்விட்டபின் பயனில்லையென்றும், அதைப்பற்றி சமையத்தில் எச்சரிக்கை யடைவது நலமென்றும் நன்குணரலாம்.

முதலாவது 5, 6 வயதுவரையில் நமக்குத் தாய் தந்தையர் செய்யும் உபசாரங்களும் நன்மைகளும் நமக்கு நன்மைகளே யென்று தோன்றாது. அச்சமயம் வெறுப்பாகவும் தொந்தரையாகவுமே தோன்றும். திருட்டாந்தமாய் ஸ்நானம் செய்தல் ஒளடதம் அருந்துதல் முதலியயாவும். ஆனால் அப்போது அறிவு விளங்காத கால மாதலால், எச்சரிக்கையால் யாதும் பயனில்லை. சற்று அறிவு உதித்து கல்விகற்கும் பருவம் வந்தபோது, முதலில் நாம் என் கல்விகற்கவேண்டும் என்ற உணர்ச்சியேகிடையாது. பெரும்பாலான பிள்ளைகளுக்கு அது மிக்க வெறுப்பும் கஷ்டமுமான தொழிலாகவும், உபாத்தியாயர் ஒருபெரிய விரோதியாகவுமே தோன்றும்.

பிறகு வயதேற வேற கூறப்படும் புத்திமதிகள் மனதிற்கு விளங்கும் நிலைமையை யடைகிறோம். "நாம் கஷ்டப்பட்டு வாசிக்கவேண்டும்; வாசித்தால் தான் மனிதனாகும்பாது பணம் சம்பாதித்து ஜீவனம் செய்யலாம்;

கலியாணம் செய்துகொண்டபின் மனைவி மக்களையும் வயது முதிர்ந்த நம் பெற்றோரையும் நாம் காப்பாற்றலாம். இன்றேல் நாமே ஆகாரத்திற்கும் வழியின்றித் திண்டாட வேண்டிவரும். கல்விகற்றால்தான் பொருள்சம்பாதித்து செல்வவந்தனாகலாம், கௌரவமுமடையலாம். இன்றேல் நாம் பிரத்தியட்சமாய்ப் பார்க்கும் கஷ்டவேலைசெய்யும் கூலியாட்கள் முதலியவர்களைப்போலவே நாமும் கஷ்ட ஜீவனம் செய்யவேண்டும்'' என்று பிறர்கூறும் புத்திமதிகளால் உணர்கிறோம்.

அதையுணரும் அறிவுவிளக்கமிருந்தாலும், அச்சமயம் அது மனதில் உறுத்துவதில்லை. பிற்காலத்தில் கல்வியில்லாக்குறையால் வருந்தும்போது தான் "அடடா அக்காலத்தில் தாய் தந்தையர் கூறிய புத்திமதியைக் கேட்காமல் போய்விட்டோமே, பள்ளிக்கூடம் என்றால் எட்டிக்காய்போலிருந்ததே'' என்று கூறிக்கொள்வது அனுபவம்.

ஆகையால் வாலிபகாலத்தில் இதைப்பற்றி நன்றாய்ச்சிந்தித்து கல்வி கற்பதில் சிரத்தையும் உபாத்தியாயரிடம் பக்தி விசுவாசமும் வைத்து காலத்தை வீணாக்காமல் நடந்துகொள்ள வேண்டும். கல்விகற்கவேண்டிய பருவகாலம் போய்விட்டால் பிறகு கல்வி ஏறாது என்பதை நன்கறிய வேண்டும். அந்தப் பருவத்தில் நன்றாய்க் கல்விகற்று அறிவைப் பிரகாசிக்கச் செய்துகொண்டால்தான், பிறகு முதுமைவருந்தனிலுங்கூட கல்வியை நாமே விருத்தி செய்து கொள்ளலாகும். நண்பர்களே! கல்வியிருந்தால் தான் செல்வம் சம்பாதிக்கலாம் என்பதொரு பக்கம் இருந்தாலும், அதனால் விசேஷமான வேறு பயன்களுமிருக்கின்றன. அவற்றில் இப்பிறவிப் பெருங்கடலைக் கடக்க அவசியமான தெப்பமாகிய ஞானத்தைப்பெறுவதே கல்வியாலாய சிறந்த பயனாகும். ஆனால் அதைக் கருதுவோர் எங்கோ மிகச் சிலரே. இனி இவ்வுலகவாழ்க்கைக்கு அனுகூலமான பயன் ஒன்றிருக்கிறது. அதாவது சிறப்பு.

"எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருகென்பர்'' என்றும்,

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையோன்— மன்னர்க்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு'' என்றும்

ஆன்றோர் கூறியிருக்கின்றனர். பூர்வபுண்ணியக்குறைவால் கற்றோனிடம் செல்வம் சேராவிடினும் இச்சிறப்பு அவன் உயிருள்ளளவும், மடிந்த பின்னும்கூட அழியாது நிற்குந்தன்மையுடையது. செல்வத்தை யொருவர் அபகரித்துக்கொள்ளக்கூடும். செல்வமுடையோனுக்குச் செல்வம் போய்விட்டால் மரியாதை, கௌரவம், பெருமை, சிறப்பு யாவும் போய்விடும். பிறகு அவன் பழைய நிலைமையை யடைவது மிக்க கஷ்டம். கல்விமானிடமுள்ள செல்வம் போய்விட்டால் அப்போதும் அவன் எங்குச்சென்றாலும்மரியாதை பெற்றுச் சிறப்படைவான். ஆகையால் மாணவப்பருவத்திலேயே இவற்றையெல்லாம் சிந்தித்துக் கல்வியைச் சிரத்தையோடு கற்றல் வேண்டும். உபாத்தியாயரிடம் பக்திவையாது அவரை வெறுப்போடும் அலட்சியமாகவும் கருதும் மாணவன் ஒருபோதும் சரஸ்வதியின் கடாக்ஷத்தைப் பெறமாட்டான்.

கல்விகற்று யௌவன பருவம் வந்தபோது சற்றேனும் முன்யோசனை செய்யாமலே மனப்போக்கின்படி செல்வது பெரும்பாலருடைய சுபாவமா

யிருக்கிறது. அந்தோ! அக்காலத்தில் எச்சரிக்கையின்றிச் செய்யும் குற்றங்களால் பிறகு நீடித்த துன்பங்களை யனுபவிக்கிறவர்கள் அனேகர். அறிவாளி அப்பருவத்தில்தான் தான்செய்யக்கருதும் ஒவ்வொருகாரியத்தையும் பற்றி முன்னாடி நிதானமாய்ச் சிந்தித்து, அதனால் பின்னால் என்ன பயன் விளையுமென்பதைத் திட்டமாய் உணர்ந்தபிறகே அக்காரியத்தில் பிரவேசிக்கவேண்டும்.

சிலவாலிபர்கள் கலியாணம் செய்து கொள்வதென்றால் பேரானந்தம் வருவதுபோல் மிக்க ஆவல் கொள்கிறார்கள். அந்தோ அதனாலேயே பிறகு மடியுமட்டும் பலதுன்பங்களை யனுபவிக்கப் போகிறோமென்பது அச்சமயம் அவர்கள் மனதிற் படுவதில்லை. ஒருவன் "தன் மனைவியைத் தொட்டுத்தாலி கட்டையிலே தொடர்ந்து நடுக் கட்டையிலே வைக்கு மட்டும் கவலைதானே" என்று ஒரு மகான் கூறியுள்ளார். ஒரு பெண்ணின் கழுத்தில் எப்போது மாங்கல்யக் கயிற்றைக் கட்டுகிறோமோ, அப்போதே நமது கால்களுக்கும் உறுதியான விலங்கு பூட்டிக்கொள்கிறோம் என்பது உண்மை. கொஞ்சம் செல்வமுடைய தாய்தந்தையர் தம்புதல்வனுக்கு இளம்பருவத்திலேயே மணம் முடிக்கப் பிரியப்பட்டு அவ்வாறே செய்கிறார்கள். அப்புதல்வன் பிற்காலத்தில் குடும்ப சம்ரக்ஷணை செய்யப் போதுமான சக்தியின்றி பெருந்துன்பங்களை யனுபவிக்கிறான். அறிவுடைய ஒருவன் ஒரு குடும்பத்தைக் காப்பாற்றும் சக்தி பெறுகிற வரையில் கலியாணத்திற்கு உடன்படவே மாட்டான்.

மேல் நாட்டார் இது விஷயத்தில் நல்ல ஆசாரத்தைத் தழுவி நடக்கிறார்கள். அங்கு ஒரு புருடன் ஒரு குடும்பத்தைக் காப்பாற்றப்போதுமான வரும்படி தான் சம்பாதிக்கும் வரையில் கலியாணம் என்பதைக் கனவிலுங் கருதான். அந்தோ நம்மவர்கள் இத்தகைய அனுகூலமான நல்ல விஷயங்களில் அவர்களைப் பார்த்துச் சீர் திருத்தமடைவதில்லை. நமக்கு அனாவசியமானவையும், தீங்கிழைக்கத்தக்கவையுமான விஷயங்களில் மட்டுமே யவர்களைப் பின்பற்றுகிறார்கள். ஆண்டவனே இப்பெருந்தவறினின்றும் நம்மைக் காப்பாற்ற வேண்டும்.

மணமுடிந்த பின்னர் இல்லறத்தில் பிரவேசித்து ஆரம்பத்தில் முன் எச்சரிக்கையின்றித் தவறாய் நடந்து கொள்வதால் அனேகர் பின்னால் வாழ்நாள் முழுதும் பெருந்துன்பமடைகிறார்கள். அதைப்பற்றி இன்னொரு முறை கூறுவாம். மேற்கண்ட இரண்டொரு விஷயங்களில் முன் எச்சரிக்கையடைந்து நடந்துகொண்டால் பிற்பாடு மிக்க நன்மைபெறலாம் என்பது திண்ணம். ஆகையால் மாணவர்கள் இவற்றை நன்கு கவனித்துச் சிந்தித்தொழுகும் வண்ணம் கருணாநிதியாகிய பரம்பொருள் அருள் புரியவேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் தத் ஸத். சீடன்.

ஆத்திசூடி உதாரணக் கதைகள்.

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஒப்புறவொழுகு"

ஒப்பு உற-உலகத்திற்குப் பொருத்தமாக (அதாவது: நீ எவ்வளவு நூல்களைக் கற்றிருந்தாலும் உலகநடையைத்தழுவி) ஒழுகு - நட என்பது இதன் பொருளாம்.

காஞ்சிப்பதியிலே நாகரத்தினம் என்ற ஒரு சிறுவன் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கல்விகற்று வந்தான். அவன் பள்ளிக்கூடத்திற்குப் போகத் தொடங்கிச் சில வருடங்கள் சென்றபின் அவனைச் சென்னைக் கலாசாலைக்கனுப்பிக் கல்விகற்கச் செய்ய வேண்டுமென்று அவன் தாய் தந்தையர் விரும்பி, அவ்வாறே சென்னைக்கனுப்பினர். அவன் சென்னைக்கு வந்து ஆங்கிலம் கற்றுவந்ததோடு தமிழ் இலக்கணம் இலக்கியம் முதலியவைகளையும் நன்றாகக் கற்று வந்தான். ஆனால் அவனுக்கு, 'நாம் நன்றாகப் படித்து வருகிறோம்' என்ற கர்வம் அதிகரித்து வந்தது. அதனால் அவன் தற்பெருமை கொண்டு எவரிடத்தும் இலக்கணமாகவே பேசிக்கொண்டுவந்தான். அதைக்கண்டு அவனுடைய உபாத்தியாயர், "தம்பி! நீ இந்த விதமாகக் கண்டவரோடெல்லாம் பேசலாகாது; இவ்விதமான பேச்சு படித்த சிலருக்கு மட்டுமே விளங்கும், மற்றையர்க்கு விளங்காது; அதனால் உனக்குத் தொந்தரவுண்டாகும்; எவ்வளவு படித்திருந்த போதிலும் உலக வழக்கத்தை யனுசரித்து யாராரிடத்தில் எந்தெந்த விதமாகப் பேசவேண்டுமோ அந்தந்த விதமாகப் பேசவேண்டும்; இதுபற்றியே ஔவைப்பிராட்டியும் "ஒப்புறவொழுகு" என்று ஓதியிருக்கின்றாள்; இந்த நீதிவாக்கியத்தைக் கவனித்து நட" என்றுபன்முறை அவனுக்குக் கூறிவந்தார். அவ்வாறு கூறி வந்தும் அவன் மிகவும் கர்வங்கொண்ட பையனாதலால் தன்னுடைய வழக்கத்தை விடாமல், "வாத்தியார் ஒன்றுந் தெரியாதவரா யிருக்கின்றார்; நாம் படிப்பது எதற்காக? நன்றாக எழுதுவதற்கும் இலக்கணமாகப் பேசுவதற்குந்தானே! இலக்கணம் படித்திருந்துங்கூட ஏன் இலககணந் தவறிப்பேச வேண்டும்" என்று உபாத்தியாயர் வார்த்தையை உதாசீனஞ் செய்து முன்னிலும் அதிக கரடு முரடானவார்த்தைகளைப்பேசி வந்தான். உபாத்தியாயர். "இவனுக்குப் பின்னால் தானே புத்தியுண்டாகும்," என்று மௌனமாயிருந்து விட்டார்.

இப்படி யிருக்கும்போது ஒரு சமயம் விடுமுறை நாள் வந்தது. அந்நாளில் நாகரத்தினம் தாய் தந்தையரைப் பார்த்து வரலாமென்று காஞ்சிக்குச் சென்றான். அங்குப்போய்ச் சேர்ந்தவுடன், பள்ளிப்பிள்ளைகளுக்கு உண்டாகும் வழக்கம்போலவே, தன்னுடைய கல்விப் பெருமையைத் தன்னூராரிடத்தில் அதிகமாகக் காட்டவேண்டுமென்ற எண்ணம் அவனுக்குண்டாயிற்று. அதனால் அவன் சென்னையில் பேசினதைக் காட்டிலும் அதிக இலக்கணமாகப் பேச ஆரம்பித்து, ஜட்காவண்டியில் ஏறியவுடனே அவ்வண்டிக்காரனிடம், 'என்னுடைய தெரு உனக்குத் தெரியுமோ' என்பதற்குப்பதிலாக, 'நம்மறு குணர்வையோ?' என்றான். அவனுக்கொன்றும் விளங்கவில்லை. அதனால் அவன். 'இவனுக்கேதோ பயித்தியம் பிடித்திருக்கின்றது' என்று அந்தப்பையனுடையவீடு தனக்குத்தெரியுமாதலால் அவனை அங்குக் கொண்டுபோய்ச் சேர்த்து அவனுடைய தாய்தந்தையரிடத்தில் "பையனுக்கேதோ பைத்தியம்பிடித்திருக்கிறது; இவனை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிப் போய்விட்டான். பையன்வீட்டிற்குள் நுழைந்தவுடன் தாய்தந்தையரைநோக்கி, "தாய்தந்தையரே! சௌக்கியமாயிருக்கின்றீர்களோ" என்பதற்குப் பதிலாக, "அன்னாய்! தாதாய்! இனிதின்வதிகின்றீரோ" என்று வினவினான். அவர்களுக்கு இந்த வார்த்தைகள் வேறொரு பாஷை போன்றிருந்தன. அதனால் அவர்கள், 'இவனுக்கு நிச்சயமாகப் பைத்தியந்தான் பிடித்திருக்கிறது,' என்று திகிற்பட்டு, "என்னடா அப்பா! இங்கிருந்து போகும்போது சௌக்கியமாகத்தானே போனாய்; திரும்பிவரும்போது பைத்தியத்தோடு வந்துசேர்ந்தாயே; இது

வும் தலைவிதியா” என்று துக்கப்பட்டார்கள். அதையும் அவன் கவனியாமல் பின்னர், தாயை நோக்கி, “களைப்பாயிருக்கிறது விரைவில் சமையலறைக்குச் சென்று சோறுகொண்டுவா” என்று சொல்வதற்குப் பதிலாக “அயர்ச்சிமிக்கது கடிதின் அட்டில்புக்கு அசனங் கொணர்க,” என்றான். இதைக் கேட்டவுடனே தாய்தந்தையர் “ஐயோ! பிள்ளைக்கு இப்படியும் பைத்தியம் பிடிக்குமா?” என்று வெளியிலோடி அக்கம் பக்கத்து வீட்டுக்காரரிடம்சொல்லி அவன் பைத்தியத்திற்கு ஒருபரிகாரந் தேடும்படிவேண்டினார்கள். ஊராரெல்லாம் வந்து கூடிவிட்டார்கள். பையன் தன்னைப் பைத்தியக்கார னென்று அவர்கள் சொல்வதற்காகக் கோபங்கொண்டு எதை எதையோ இலக்கணமாகப் பேசிக்கொண்டிருந்தான். அப்போது வந்தவர்கள் அவனைப் பிடித்துக்கட்டி அவன் பித்தந்தணிவதற்காக அவனுடைய மண்டையைக் கீறி எலுமிச்சம்பழரசம் பிழியவும், வேறு பல சிகிச்சைகளைச் செய்யவும் தொடங்கிவிட்டார்கள். அவனுக்கோ அடங்காத கோபம் வந்துவிட்டது. அதனால், அவன் அவர்களை நோக்கி, “படிக்காதவர்களே! என் வார்த்தைகளைத் தெரிந்து கொள்ளாமல் ஏன் என்னை இவ்வாறு வருத்தப்படுத்து கிறீர்கள்; எனக்குப் பைத்தியம் இல்லை; நீங்களே பைத்தியம் பிடித்தவர்கள்” என்று சொல்வதற்குப் பதிலாக, “கலையறிவிலீர்! என் மாற்றந் தெளியாது, எனையாதுக்கிங்ஙனம் துன்புறுத்து கின்றனிர்; என்பாற் பித்திலை; உன்மத்தர் நீவிரே” என்று கூறிக்கொண்டு அவர்கள் கைப்பிடியை விட்டு நீங்கத் திமிறி அவர்களைக் கால்களாலும் கைகளாலும் உதைத்துத் தள்ளினான். அவர்கள் எல்லோரும், “பையனுக்கோ பைத்தியம் அதிகரிக்கிறது; இனி வெளியில் வைத்திருந்தால் தீங்குவரும்” என்று அவனை நன்றாக அடித்து உதைத்துக் கைகளையும் கால்களையுங் கட்டி ஒரு அறைக்குட் போட்டுப் பூட்டி விட்டுப் போய்விட்டார்கள். பையன்பாடு திண்டாட்டமாய் விட்டது. அவனுக்கு உடம்பெல்லாம் காயம்; மண்டை கீறப்பட்டு இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. பசியோ சகிக்க முடியவில்லை. இந்தத் துன்பங்களோடு அவன் இருட்டறையிற் கிடந்து, “இந்த கதி நமக்கு எதனால் நேர்ந்தது” என்று நன்றாக யோசித்துப்பார்த்தான். அப்பொழுதுதான் அவனுக்குப் புத்திவந்தது. “வாத்தியார், ‘ஒப்புற வொழுகு’ என்னும் நீதியைக் கவனித்து நடக்கும்படி உபதேசித்ததை உதாசீனம் செய்து கண்டவரோ டெல்லாம் இலக்கணமாகப்பேச ஆரம்பித்ததினாலேயே நமக்கு இக்கதி நேர்ந்தது” என்று அவன் தெரிந்துகொண்டான். அதன்மேல் அவன் “இனி உலகத்தில் ஒவ்வொருவருக்கும் தக்கபடி பேசப் பழகிக்கொள்ளவேண்டும்; இப்பொழுது நமக்கு நேர்ந்திருப்பவைகளை வெளியேசொன்னால் வெட்கக்கேடு; மெதுவாக வெளியேறுவதற்கு மார்க்கந் தேடவேண்டும்,” என்று உள்ளிருந்தபடியே, தாயாரைக் கூவி, “அம்மா எனக்குப் பைத்தியமில்லை; கதவைத்திறந்துவிடு” என்றான். உடனே தாயுந்தந்தையும் “நாம் செய்தபரிகாரத்தால் வெகு சீக்கிரமாகவே பையனுக்குப் பைத்தியம் நீங்கி விட்டது” என்று சந்தோஷித்துக் கதவைத் திறந்து அவனுடைய கட்டுக்களை அவிழ்த்து விட்டு, அவனைநோக்கி, “எனப்பா! உனக்கு இப்படிப் பைத்தியம் பிடித்தது?” என்று வினவினார்கள். அவன் மிக்க அவமானப்பட்டு “என்னமோ தலைவிதி” என்று சொல்லிக்கொண்டு ஒருமூலையில் உட்கார்ந்தான். பின்னர் அவன் நாலைந்து தினங்கள் வெளியேறாமலிருந்துவிட்டுப் பள்ளிக்கூடம் போய்ச்சேர்ந்து கிரமமாக உலகநடையைத் தழுவிப்பேசி ஒப்புறவொழுகினான்.

S. V. ஆறுமுகன்.

கைவல்ய நவநீத வசனம்

(34-ம் பக்கம் தொடர்ச்சி)

இம்மட்டில் சூக்கும பூதங்களின் உற்பத்தி முடிந்தது. மூலப்பிரகிருதியின் சத்துவ குணத்திலும், இரஜோ குணத்திலும், சத்துவத்தில் சத்துவம், சத்துவத்தில் இரஜசு, சத்துவத்தில் தமசு என்றும், இரஜசில் சத்துவம், இரஜசில் இரஜசு, இரஜசில் தமசு என்றும் மும் மூன்று குணங்கள் அந்தர்ப்பாவமாய் இருந்ததுபோல், மூலப் பிரகிருதியின் தமோ குணத்திலும் சத்துவ இரஜோ தமோ குணங்கள் அடங்கியிருக்கின்றன. அக்குணங்கள் இந்தத் தன்மாத்திரை பூதங்கள் முழுமையும் சம்பந்தித்து நிற்கும். அதாவது இப் பூதங்களுக்கும் அம் முக்குணங்கள் உண்டு என்றுணர வேண்டும்.

இத் தன்மாத்திரை பூதங்களின் சத்துவகுணத்தில் சமஷ்டியில் (அதாவது ஐந்துபூதங்களும் சேர்ந்த மொத்தத்தில்) அந்தக்கரணமும், வியஷ்டியில் (அதாவது ஐந்து பூதங்களும் தனித்தனி பிரிந்து நின்றதிலிருந்து) ஞானேந்திரியங்களும் உற்பத்தியாயின. சமஷ்டி என்பது கூட்டம்-தோப்பு போல்; வியஷ்டி என்பது தனித்தனி-விருட்சம் என்பது போல்.

மேற்படி தன்மாத்திரை பூதங்கள் ஒன்று சேர்ந்து அந்தக் கரணம் உண்டானதால் அது ஒன்றாகவே தோன்றின போதிலும், ஐந்து பூதங்களால் உண்டானது பற்றி அந்தக்கரணத்தில் ஐந்து தொழில்களும்,அதனால் ஐந்து பெயர்களும் அடங்கியிருக்கின்றன. எந்தெந்த பூதத்திலிருந்து எதெது உற்பத்தியாயிற்றோ அததற்கு அந்தந்தப் பூதத்தின் குணமிருக்கும். அதற்குத் தக்க தொழிலுமிருக்கும்.

அந்தக்கரண விவரம்.

அந்தக்கரணம் ஞானத்திற்குச் சாதன மானது. ஞானம் சத்துவ குணத்தாலுண்டாவது. அந்தக் கரணம் தேகத்தினுள் இருப்பதால் அதற்கு அப் பெயர் வந்தது.

அந்தக்கரணங்கள் உள்ளம், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனவைந்தாம்.

அவற்றுள், ஆகாயத்தின் சத்துவ அமிசத்தில் உற்பத்தி யானது உள்ளம். ஆகாயத்தின் தொழில் அவகாச மளிப்பது; அப்படியே உள்ளமும் மனம் புத்தி முதலிய மற்றவற்றிற்கும் இடங்கொடுத்து ஆகாயத்தைப் போல் எதிலும் தாக்கற்று சலனமின்றிக் கலங்காது நிற்கும்.

மனம்— வாயுவின்சத்துவ குணத்திலுண்டானது. வாயுவின் தொழில் சதா சலித்துக்கொண்டே யிருப்பதாகும். அதைப்போலவே மனமும் சதா அலைந்து கொண்டே யிருக்கும்.

புத்தி—தேயுவின் சத்துவ குணத்திலுண்டானது. தேயுவின் குணம் தன் பிரகாசத்தால் எல்லா வஸ்துக்களையும் இன்ன தின்ன தென விளக்கிக் காட்டுதல். புத்தியும் அவ்வாறே விஷயங்களை இது நல்லது இது கெட்டது என விளக்கிக் காட்டும்.

சித்தம்—அப்புவின் சத்துவ குணத்திலுண்டானது. அப்பு (ஜலம்) வின் குணம் ஒன்றிலிருந் தொன்றைப் பற்றிச் செல்வது. அதுபோலவே

சித்தமும் ஒரு விஷயத்திலிருந்து மற்றொரு விஷயத்தைத் தொடர்ந்து பற்றிச் செல்லும். இதற்குச் சிந்தா விருத்தி யென்றும் பெயர்.

அகங்காரம்—பிருதிவின் சத்துவ குணத்தி லுற்பத்தியானது. பிருதிவியின் குணம் கடினமாய் எதையும் எதிர்த்து நிற்பதாகும். அவ்வாறே அகங்காரமும் நான் என்கிற அபிமானத்தால் எனக்கு நிகர் யாருமில்லையென்று அகம் பாவங்கொண் டிருக்கும்.

ஞானேந்திரியங்களின் விவரம்.

சூக்கும பூதங்களின் சத்துவகுண வியட்டியில் உண்டான ஞானேந்திரியங்கள் சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என ஐந்தாம். இவை மேற்படி பூதங்கள் தனித்தனி பிரிந்திருந்த நிலைமையில் உற்பத்தியானதால் தேகத்தில் தனித்தனியாய் ஒவ்வோரிடத்தில் அமைந்திருக்கும். இவற்றுள் :—

சுரோத்திரம்—ஆகாயத்தின் சத்துவகுணத்திலுற்பத்தியானது. ஆகாயத்தின்குணம் சத்தவிஷயத்தை யறிதலாதலால் சுரோத்திரேந்திரியமும் செவியில் நின்று சத்தத்தை யுணரும்.

துவக்கு—வாயுவின் சத்துவகுணத்தி லுற்பத்தியானது. வாயு ஸ்பரிச விஷயத்தை யறியும் குணமுடையதாதலால் துவக்கிந்திரியமும் சர்வாங்கமு மிருந்து ஸ்பரிசத்தை யுணரும்.

சட்சு—அக்கினியின் சத்துவகுணத்தி லுற்பத்தியானது. அக்கினி ரூபத்தையறியும் குணத்தை யுடையதாதலால் சட்சு (நேத்திர) இந்திரியமும் கண்களில் இருந்து ரூபங்களை யறியும்.

சிங்குவை—அப்புவின் சத்துவகுணத்தில் உற்பத்தியானது. அப்பு இரச (உருசி) குணமுடையது. அதுபோல் சிங்குவேந்திரியமும் நாவினிடமாயிருந்து நாம் புசிக்கும் சகல வஸ்துக்களின் உருசியையும் அறியும்.

ஆக்கிராணம்—பிருதிவியின் சத்துவகுணத்தி லுற்பத்தியானது. பிருதிவியின் குணம் கந்த கந்தமாதலால் கிராணேந்திரியமும் நாசியினிடமாகவிருந்து கந்த உணர்ச்சியை அறியும்.

அந்தக்கரணங்களும் ஞானேந்திரியங்களும் தன்மாத்திரை பூதங்களின் சத்துவகுணத்தில் உற்பத்தியானமையால் ஞானசாதனமாயின.

சூக்கும பூதங்களின் இரஜோகுணத்தில் சமஷ்டியில் பிராணாதி பஞ்ச வாயுக்களும், வியஷ்டியில் கன்மேந்திரியங்களும் உண்டாயின.

சமஷ்டியில் உற்பத்தியான பிராணவாயு ஒன்றே யாயினும் இடபேதத்தால் ஐவகைத் தொழில் பேதத்தாலும் வியானன், பிராணன், அபானன், சமானன், உதானன் என ஐந்து வகை வாயுக்களாயிற்று. இவற்றில்:—

வியானன்—ஆகாயத்தின் இரஜோ குணத்தி லுற்பத்தியானதால் ஆகாயத்தைப் போலவே சர்வாங்கமும் வியாபித்து எங்கும் இரத்தத்தைப் பரவச் செய்து தேகத்தைத் தாங்கி நிற்கும்.

பிராணன்—வாயுவின் இரஜோ குணத்தி லுற்பத்தியானதால் வாயுவைப் போலவே இருதயத்திலிருந்து சதா சலித்துக் கொண்டே பசிதாகக் கிரியைகளைச் செய்யும்.

அபானன்—தேயுவின் இரஜோ குணத்தி லுற்பத்தியானதால் குதஸ்தானத்திலிருந்து மல ஜலாதிகளை வெளியிற்றள்ளும் தொழிலைச் செய்யும்.

சமானன்—அப்புவின் இரஜோ குணத்தி லுற்பத்தியானதால், நாபியினிடமாயிருந்து உண்ட அன்ன பாநாதிகளைப் பாக யோக்கியமாகச் சமானம் செய்யும்,

உதானன்—பிருதிவியின் இரஜோகுணத்தி லுற்பத்தியானதாதலால் கண்டஸ்தானத்திலிருந்து உஸ்வாச நிஸ்வாசம் செய்யும்.

இந்த ஐந்து வாயுக்களன்றி பிராணவாயுவிற் றோன்றிய வேறு ஐந்து உபவாயுக்கள் உண்டென்றும் கூறப்படுகிறது.

அவை நாகன், கூர்மன், கிரிகான், தேவதத்தன், தனஞ்சேயன் என ஐந்து வாயுக்களாம். இவற்றில்,

நாகன்—தேகத்தை முறுக்கிக் கொட்டாவி விடச் செய்வது.

கூர்மன்—விக்கலையும் எப்பத்தையும் உண்டாக்குவது.

கிரிகான்—தும்மல் இருமலை யுண்டாக்குவது.

தேவதத்தன்—சிரித்தல், சோகம் முதலியவற்றை யுண்டாக்குவது.

தனஞ்சேயன்—பிராணன் நீங்கியபின் தேகத்தில் ஐந்து நாள் தங்கியிருந்து அதை வீங்கி வெடிக்கச் செய்வதாம்.

ஆயினும் இவ்வைந்து தொழில்களும் பிராணவாயுவின் தொழிலேயாதலால் வாயுக்கள் ஐந்தென்றே கூறுவது முண்டு.

கன்மேந்திரிய விவரம்.

வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபத்தம் அல்லது ஆண் குறி எனக் கருமேந்திரியங்கள் ஐந்தாம். இவை சூக்கும பூதங்கள் தனித்தனி நிற்கும் நிலைமையில் உற்பத்தியானதால் தேகத்தில் தனித் தனியே வெவ்வேறு பாகங்களில் நின்று தொழில் செய்கின்றன.

வாக்கு— ஆகாயத்தின் இரஜோ குணத்தில் உற்பத்தியாயிற்று. ஆகாயம் சத்தத்திற்குரியதாதலால் வாக்கு ஆகாயத்தினிடமாக வசனிக்கும்.

பாணி—வாயுவின் இரஜோ குணத்தி லுற்பத்தியானது. ஆதலால் வாயுவினிடமாக இடுதலும் ஏற்றலும் செய்யும்.

பாதம்—அக்கினியின் இரஜோ குணத்திலுண்டானதாதலால் நடப்பதாகிய தொழிலைச் செய்யும்.

பாயுரு—அப்புவின் இரஜோ குணத்தி லுற்பத்தியானதாதலால் மல ஜலங்களைக் கழிக்கும் தொழிலைச் செய்யும்.

உபத்தம்—அல்லது ஆண் குறி. பிருதிவியின் இரஜோ குணத்தி லுற்பத்தியானதால் ஆனந்தத்தை யுண்டாக்கும்.

மேற்கூறிய பிராணாதிபஞ்சவாயுக்களும் கன்மேந்திரியங்களும்தொழில் செய்வதால் கிரியாசாதனமாயின. இவ்வாறு சூக்கும பூதங்களின் சத்துவ இரஜோகுணங்களி லுற்பத்தியான அந்தக்கரணங்கள், ஞானேந்திரியங்கள் பிராணாதி பஞ்ச வாயுக்கள், கன்மேந்திரியங்கள் ஆகிய இருபதும் சூக்கும தேகதத்துவங்கள் என்று அழைக்கப்படும்.

இதுவரையில் சூக்கும பூதங்களின் சத்துவ இரஜோகுண உற்பத்திகள் முடிந்தன. இனி இவற்றின் தாமசகுணம் எஞ்சிநிற்கிறது. எல்லாம் வல்ல பரமேசுவரன் இச்சூக்கும பூதங்களின் தமோகுணத்தில் அவற்றைப் பஞ்சீகரித்துத் தூல பூதங்களாக்கினுன். அப்படி யாக்கப்பட்டவைகளுக்குப் பஞ்சீகரண பூதங்களென்றும், தூலபஞ்ச பூதங்களென்றும் பெயர். அவையே நம்கட்புலனுக்குத் தோற்றமாகின்றவை. இக்காரணம் பற்றித் தன்மாத்திரை பூதங்களுக்கு அபஞ்சீகிருத பூதங்களென்றும் பெயர் வந்தது.

பஞ்சீகரண விவரம்.

மேற்படி சூக்கும பூதங்கள் பஞ்சீகரிக்கப்படும் முறைமையைப்பற்றி கைவல்ய நூலில் மூலபாடத்தில் கூறியுள்ள கவி பின் வருமாறு:—

ஐந்துபூ தமும்பத் தாக்கி யவைபாதி நந்நான் காக்கி
நந்துதம் பாதி விட்டு நான்கொடு நான்குங் கூட்ட
வந்தன தூல பூத மகாபூத மிவற்றி னின்றுந்
தந்தன நான்காந் தூல தநுவண்ட புவன போகம்.

(இதன் விவரம் மறு சஞ்சிகையில் தெளிவாய்க் கூறப்படும்) (தொடரும்)

சீடன்,

ஓர் அறிவிப்பு

நம் சந்தாநேயர்களுக்கு:—

நாம் எவ்வளவோ கோரிக்கொண்டிருந்தும் அனேகம் சந்தாதாரர்கள் சந்தா நம்பர் குறிக்காமலே மணியார்டர்களை அனுப்பிவிட்டார்கள். அவர்களின் விலாசம் பூரணமாய்த் தெரிவித்திருந்தோர்க்கெல்லாம் உடனுக்குடன் சந்தாநம்பர் தெரிவிக்கும்படி கார்ட் எழுதினேம். அப்போதும் சிலர் தெரிவிக்கவேயில்லை. சிலர் ஆடிமாதம் பிறந்து பணம் அனுப்பாதவர்களுக்கெல்லாம் வி.பி. யனுப்பப்பட்ட பின்பும் மணியார்டர் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். பதிவு புத்தகத்தின்படி வி.பி.க்களனுப்பப்பட்டதால் சந்தாநம்பர் தெரியாததால் பணம் வரவு வைக்காதிருந்தவர்களுக்கும், வி.பி. போய்விட்டது. பத்தாயிரம் பேர்களில் பணம் அனுப்பியவர்களையெல்லாம் கவனத்தில்வைத்துக்கொண்டிருந்து அவர்களுக்கு வி.பி. யனுப்பாதுநிறுத்துவது செய்யக்கூடிய காரியமல்ல. இவ்வாறு அனேகம் வி.பி.க்கள் வாபீஸ்வந்து நஷ்டத்தை யுண்டாக்கின. அதோடு நிற்காமல் சந்தா நம்பரைத் தெரிவிக்காது நமக்கு கஷ்டமும் நஷ்டமும் அளிப்பது போதாமல் சிலர் தாங்கள் முன்னமே பணம் அனுப்பிவிட்டதாகவும் அப்படி யிருக்கச் சஞ்சிகையை வி.பி யிலனுப்பியது பெரிய அக்கிரமம். மோசம் என்றும் வரம்புகடந்து ஒழுங்கீனமாய் மனம்போனபடி எழுதுகிறார்கள்.

அதிலும் இலங்கையிலிருந்து வரும் மணியார்டர்களால் நமக்கு மிக்கதொந்தரையேற்பட்டது. ஏனெனில் அந்த மணியார்டர்கள் சந்தாதாரர் எழுதியபடி வராமல் தபால் ஆபீஸில் நகல் எடுத்து நமக்கு அனுப்பப் படுகின்றன. அந்த நகல்களை யெழுதும் தபாலாபீஸ் இலிகிதர்கள் அவற்றை யின்னொருவர் பார்த்துப் பணம் அனுப்பியவர் இன்னரென்று அறிந்துகொள்ள வேண்டுமே யென்ற எண்ணம் சற்றுமின்றி, தாங்கள் எழுதியதைத் தாங்களே மறுபடி வாசிக்க முடியாதவிதமாய் மனம்போனபடி கிறுக்கி விடுகிறார்கள். கூபனில் (Coupon) சந்தா நம்பராவது வேறெந்த விஷயமாவது எழுதுவ

தேயில்லை. பெரும்பாலும் பெயரும் விலாசமுமே சற்றும் கண்டறியக் கூடுவதில்லை. இதனால் அவர்களுக்குக் கடிதம் எழுதிக்கேட்பதற்கே வழியில்லை. இப்படிச் சில மணியார்டர்கள் நம்மிடம் தகவலறியக் கூடாமலிருக்கின்றன.

சிலர். 3 - 4 - 5 பெயருக்குப் பணம் அனுப்பிவிட்டு அதில் 2-3 பெயருக்குச் சந்தாநம்பர் தெரியாதென்று திட்டமாயெழுதிவிடுகிறார்கள். அவர்களே பிரகு சஞ்சிகை வரவில்லை, அல்லது பணம் அனுப்பியும் வி.பி.யில் வந்துவிட்டது என்று பிரமாதமாய் எழுதுகிறார்கள்.

இப்போது இவ்விஷயங்களை நாம் தெரிவிப்பது எதற்காகவெனின், மேற்கண்ட காரணங்களால் தகவலறியக் கூடாத மணியார்டர்கள் சில நம்மிடமிருக்கின்றன. (சில புண்ணிய புருடர்கள் பழைய சந்தாதாரரா யிருந்தும் நம்பர் தெரிவியாததோடு புது ஆசாமி யெழுதுவதுபோல், “ஆடிமுதல் ஒரு வருடத்திற்குச் சஞ்சிகையனுப்ப வேண்டியது” என்று எழுதிவிட்டுப் பிறகு எனக்குப் பணமனுப்பியதற்குப் புதியநம்பர்கொடுத்து ஒருசஞ்சிகை வந்ததோடு பழைய நம்பருக்கும் ஒரு வி.பி. என் அனுப்பவேண்டும் என்று தடபுடலாய் எழுதி யனுப்புகிறார்கள்.) பணம் அனுப்பி சஞ்சிகைவராதிருந்தால் அத்தகைய்யார் மேற்கண்ட காரணங்களால் நம்மேல் குற்றமில்லையென்பதையுணர்ந்து தங்கள் பெயர் விலாசம், பழையசந்தாதாரரா அல்லது புதியதாய்ச் சேருகிறவர்களா என்றவிபரங்களை உடனே தெளிவாய்த் தெரிவிக்கும்படி வேணடிக் கொள்கிறோம்.

இலங்கையிலுள்ள சந்தாநேயர்கள் இதை முக்கியமாய்க் கவனிக்கக் கோருகிறோம். சிலர் கடிதம் எழுதினாலும் மணியாடரில் விஷயம் விளங்காததால் இக்கடிதம் இன்ன மணியார்டருக்குச் சம்மந்தப்பட்டதென்று கொஞ்சத்தில் விளங்குவதில்லை.

பத்திராதிபர்.

வைத்தியக் குறிப்பு.

(37-ம் பக்கத்தொடர்ச்சி)

முற் சஞ்சிகையில் கூறியபடி நோயற்று வாழ்வதற்கு நம் முன்னோர்களால் ஏற்படுத்தப் பட்ட நியமங்கள் ஆசாரமென வழங்கும் சௌசம், ஆசமந்நியம், ஸ்நாநம், பிராணாயாமம், சந்தியாவந்தனம் ஆகிய இவற்றின் அந்தரங்கங்களையும், அவற்றால் உண்டாகும் சரீர சுகத்தையும் பற்றி ஒருவாறு எழுதுவோமாக. முதலில் சொல்லும் சௌசம் என்னும் நியமத்திற்குச் சகலரும் சாதாரணமாய் வழங்கும் சுத்தம் சுத்தம் என்பது வாஸ்தவமாய் இருந்தாலும் நியமத்தின் கிரமததால் சுத்தம் என்பதற்கே ஏற்பட்ட நியமம் என்பது யுக்திக்குப் பொருத்தமற்றதாய்த் தோன்றுகின்றது. எப்படியெனில் சௌசம் என்பது அல்பாசமானத்துக்குப் போனவுடன் ஆண்குறியின் முனையில் குளிர்ந்த சலத்தை கையால் தொட்டுத் தடவுதலாகும். இப்படிச் செய்வது விடப்பட்ட நீரின்விஷமானது பாஹியசர்மத்தில் தாக்காமல் தடுப்பதற்கு என்று சொன்னாலும், முக்கியமாய் இந்த நியமத்தால் காலையில் ஆண்குறியின் முனையில் குளிர்ந்த சலம் படுவதால் சுத்தம் என்பது ஒரு பட்சம் அங்கீகாரம் செய்தாலும் அதில் ஒருபெரிய இரகசியமிருப்பதாகவே யூகிக்கவேண்டியிருக்கின்றது. அஃதாவது அதிகாலையில் குளிர்ந்தசலம் அங்கு பட்டமாத்திரத்தில் சிரசிலுள்ள உஷ்ணங்களெல்லாம் உடனே நீங்கு

வதுமன்றி நீர்த்துவாரத்தின் வழியிலுள்ள இரணங்கள் யாவற்றையும் பூரா வும் நீக்குகின்றமென்பதைப் பலர் ஒப்புக்கொள்வது அசாத்தியமென்றாலும் ஒப்புக்கொள்ளும்படி அநேக யுக்திகள் சொல்லலாம். எப்படியெனில் சாதா ரணமாய் நித்திரைவிட்டுக் காலையில் எழுந்தவுடன் சரீரத்தில் எங்கும் சலம் படாமல் ஆண்குறியில்மட்டும் பட்டமாத்திரத்தால் கபாலத்தில் அக்குளிர்ச்சி தாக்குவதை ஒவ்வொருவரும் உணரலாம். அன்றியும் மேல் நாட்டில் ஜெர் மனி தேசததில் டாக்டர் லூவிஸ்கூனி என்பவர் ஒருவரால் கண்டுபிடிக்கப் பட்ட சலசிகிச்சை சாஸ்திரத்தில் சொல்லியுள்ளவைகளில் முக்கியமாய் சிட்ஸ் பாத் என்று ஒன்றைச் சொல்லியிருக்கின்றார். அத்தகைய சிட்ஸ் பாத்தென்பது யாதெனில், ஒரு சிறு பாத்திரத்தில் சலம்விட்டுக் காலை யில் சரீரத்தில் சலம் படாமல் ஆண்குறியை மாத்திரம் மேற்படி சல முள்ள பாத்திரத்தில் விட்டு முனையிலுள்ள சர்மத்தைத் தேய்த்தால் சிரசு முதல் அந்தவிடம் வரையிலுள்ள பாகத்தைக் குளிரச்செய்து சகல இர ணங்களையும் குணம் செய்கின்றது மல்லாமல் எத்தகைய ஸ்திரீ வியாதி களும் நிவர்த்தியாய் விடுகின்றதென்று விஸ்தாரமாய் அவர் எழுதியிருக் கின்றார். இதன் விபரங்களைப் பார்க்க விரும்புவோர்கள் மேற்படி டாக் டரால் எழுதப்பட்டுள்ள (Sience of Healing) (சைன்ஸ் ஆப் ஹீலிங்) வியாதியின் காரணங்களாய இரணங்களை ஆற்றும் விதத்தைக்கூறும் சாஸ் திரம் என்னும் புஸ்தகத்தை வாங்கிப் பார்க்கவும். ஆனபடியால் சௌசத் தால் பெருங்குணம் என்பது சகலரும் ஒப்பத்தகுந்ததே. இனி ஆசமன் னியத்தைப்பற்றி அடுத்த சஞ்சிகையில் வெளியிடுவோம். (தொடரும்).

டாக்டர் மே, மாசிலாமணி முதலியார்.

கற்கோட்டை—நாவல்

(479-ம் பக்கத்தொடர்ச்சி)

கூடம் விசாலமா யிருந்தது. அந்தச்சமயத்திற்கு அதுஒரு நியாய சபை யாய் ஜோடிக்கப்பட்டிருந்தது. ஒரு புறம் சற்று உயரத்தில் நியாயாதி பதிக்கு ஒரு ஆசனம் அமைக்கப்பட்டிருந்தது. அதன் வலப்புறம் அவ்வூர் மேயரும், நகரப் பஞ்சாயத்து அவயவிகளில் பிரதானமான நாலைந்து பேரும் உட்கார்ந்திருந்தார்கள். நீதவான் ஆசனத்தின் பின்புறம் ஸர்தாரின் வீர ரில் எட்டுப்பேர் ஆயுதபாணிகளாய் நின்றிருந்தார்கள். நீதவானுடைய இட துபக்கம் ஒருபெரிய நாற்காலி போடப்பட் டிருந்தது. ஸர்தார் வேண்டுகோ ளின்படி சுந்தரநாயகம் பிரபு அதில் உட்கார்ந்து கொண்டார்.

26-வது அத்தியாயம்.

சுந்தரநாயகம் பிரபு சபையில் உட்கார்ந்ததே ஸர்தார் அவரை நோக்கி, "பிரபுவே! நான் வீட்டிலில்லாததைக் கண்டு தாங்கள் வியப்படைந் திருக்கலாம். இரவு இங்கு தங்கவேண்டு மென்கிற அபிப்பிராயம் எனக் கில்லை. திடீரென்று அக்கப்பற் சேதம் நேர்ந்ததாலும், அதிலும் அது கொள் ளைக் கப்பல் என்று தெரியவந்ததாலும், நான் இங்கு தங்கநேர்ந்தது. இன் னும் அதில் நேர்ந்த அதிசயமாவது, அக்கொள்ளைக் கப்பலின் தலைவனே கரைக்கு வந்திருந்தான். பிடிப்பதற்குள் மறுபடியோடிக் கடலிற் குதித்து

விட்டான். ஆயினும் அக்கப்பல் இரவு அடியோடு முழுகிப்போயே யிருக்கும். காலையில் சில கப்பல்கள் துறைமுகத்தில் வந்திருக்கின்றன ஆனால் இப்போது அக்கொள்ளைக்கப்பலை யடையாளங் கண்டறிவது கஷ்டம்” என்றார்.

அச்சமயம் அவ்வூர் அதிகாரி “ஒரு ஸ்திரீ இரவு கப்பற்சேதத்தினின்றும் காப்பாற்றப்பட்டிருப்பதாய்க் கூறினீர்களே, அம்மாது .....” என்றபோது,

ஸர்தார்.—ஆ! ஆம் ஆம். அம்மாது இப்போது சற்று சுகமடைந்திருக்கிறாள். அவள் போய் துறைமுகத்திலுள்ள கப்பல்களைப் பார்வையிட்டால், அக்கள்ளக் கப்பலை யறிந்துகொள்ளக்கூடும்” என்றார்.

அச்சமயம் கதவு திறக்கப்பட்டதும் குற்றவாளியாகிய கண்ணபிரான் காவலர்களால் நீதிச்சபையில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். குற்றவாளியாய்ச் சபையில் நிறுத்தப் பட்டாலும், மகா வஞ்சகத் துரோகியாகிய தன் அம்மானை யச்சபையில் கண்டாலும், கண்ணபிரான் சற்றேனும் மனக்கலக்க மடையாது தைரியத்தோடும் பொறுமையோடும் நியாயாதிபதியின் முன் நின்றான்.

அவனுடைய அம்மானாகிய சுந்தரநாயகம் பிரபுவும் மேலுக்கு மனக்கலக்கமில்லாதவன்போல் காணப்பட்டான். ஆனால் அவன் மனமோ மிக்க கலவரமும் திகிலும் நிறைந்ததாய், எங்கே கண்ணபிரான் படிக்கட்டுகளின் மர்மத்தை வெளியிட்டு விடுவானோ வென்று திகில்கொண்டிருந்தது.

ஸர்தார் அமிர்தநாயகம் கண்ணபிரானை நோக்கிக் கீழ்க் கண்டபடி கூறத்தொடங்கினார்.—

“பிரபுவே! நான் நடக்கவேண்டிய விஷயத்தைப் பற்றி மிக்க விசனத்தோடு கூறுகிறேன். தங்கள் சுற்றத்தாராகிய இப்பிரபு அனுப்பிய ஆள் மூலமாய் மகாராணியவர்கள் எனக்கனுப்பிய கட்டளையின்படி, நான் இது விஷயத்தில் இன்னும் ஆலசியம் செய்வதற்கில்லை. சட்டப்படி அமுல் நடத்தக் கடமைப்பட்டவனாகி விருக்கிறேன். இப்போது கேசவபுரம் ஜமீன்தாராகிய கண்ணபிரான் பிரபு தாங்களே யென்று ருசுப்படுத்தப்பட்டிருக்கிறது. தாங்களும் அதை மறுதலித்துக் கூறவில்லை. பிரபுவே! தாங்கள் இராஜத்துரோகம் என்ற குற்றம் செய்ததாக, அதற்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் நீதிச்சபையார் தங்களுக்குச் சிலதினங்கட்கு முன்பு மரணதண்டனை விதித்திருக்கிறார்கள். சட்டப்படி, தாங்கள் எந்தவிடத்தில் பிடிக்கப்பட்டீர்களோ அந்த ஸ்தலத்திலுள்ள நியாயாதிபதி தாங்கள் பிடிக்கப்பட்ட இருபத்து நான்கு மணிநேரத்திற்குள் தங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் மரணதண்டனையை நிறைவேற்ற வேண்டுமென்று விதித்திருக்கிறது. அதன்படி இப்போது தங்கள் விஷயத்தில் நடத்தவேண்டியிருக்கிறது. அப்படி நடத்தக்கூடாதென்பதற்குத் தாங்கள் ஏதாவது காரணம் கூறக்கூடுமோ!” என்றார்.

அப்போது சபையிலுள்ளாரனைவரும் ஆவலோடு கண்ணபிரான் முகத்தை நோக்கினார்கள். கண்ணபிரான் ஸர்தாரை நோக்கி, “ஆம். அப்படி நடத்தக்கூடாதென்பதற்குத் தக்க காரணம் இருக்கிறது” என்றான்.

ஸர்தார்.—“இருந்தால் என்ன காரணம் கூறுங்கள்!” என்றார்.

கண்ணபிரான் “அக்காரணம் இதோ இக்கடிதத்தி லிருக்கிறது” என்று கூறிக்கொண்டே தன்மடியிலிருந்து ஒரு கடிதத்தை யெடுத்தான். ஸர்தார் “அதென்ன கடிதமாயிருக்கும்” என்றார்.

கண்ணபிரான் பதிலுரைக்க வாய்திறக்குமுன் கதவு படீரென்று திறக்கப்பட்டதும் சேதமாகும் கப்பலைக் கொள்ளையடிக்க இரவு கடற்கரையில் காத்திருந்த ஜனங்கள் ஒரு மனிதனை பலாத்காரமாய்ப் பிடித்திழுத்துக் கொண்டு வந்து ஸர்தார் எதிரில் நிறுத்தினார்கள். ஸர்தார் அவன் முகத்தைக்கண்டதும் வியப்புற்று "ஓ கடபற்கொள்ளைக்காரன்!" என்றார். கண்ணபிரான் அதைக்கேட்டதே மிக்க வியப்படைந்து "ஆஹா! பலராமன்!" என்றான்.

அதைக்கேட்டதே அக்கள்ளன் கண்ணபிரானை நோக்கியதும் அவன் கையிலிருந்த கடிதத்தைப் பார்த்துவிட்டு "ஐயையா! இது என்னுடையது!" என்று கூவிக்கொண்டே அதைத் தாவிப் பிடுங்கப் போனான்.

கண்ணபிரான்.—இதுவா உன்னுடையது? களப்பயலே!" என்று அவனைப் பின்னுக்குத் தள்ளிவிட்டான்.

சபையில் பெருங் குழப்ப முண்டாய் விட்டது. கள்ளனாகிய பலராமன் "இது எனக்குச் சொந்தமானது. இராணியெனக்குக் கொடுத்தது. நான் அதை நிரூபிப்பேன்" என்று ஓயாமற் கூவினான்.

இக்கடிதத்தைப்பற்றி இரண்டொரு சங்கதிகள் கூறிவிட்டு நமது கதையைத் தொடர்ந்து செல்வோம். இக்கடிதம் பலராமனுக்கு இராணியால் கொடுக்கப்பட்டதென்றும், அவன் காயம்பட்டுக் கற்கோட்டையிலிருந்தபோது, அது செல்வராயரிடம் சிக்க, அவர் அதைக் கமலாம்பாள் அரியநாயகி தங்கம்மாள் மூவர்க்கும் வாசித்துக்காட்டிக் கோபத்தோடு கிழெறிந்து விட்டாரென்றும், கமலாம்பாள் அதை இரகசியமா யெடுத்து வைத்துக்கொண்டு தன் காதலனைக் காப்பாற்ற வெண்ணிப் புறப்பட்டபோது பலராமனிடம் சிக்கிக்கொண்ட விஷயம் நேயர்களறிந்ததே.

கமலாம்பாள் அக்கடிதத்தைத் தன் உள்மடியில் மிக்க பத்திரமாய் வைத்துக்கொண்டிருந்தாள். பலராமன் அவளைத் தன் இராஜமாளிகையென்ற கப்பலின் ஓர் அறையில் சிறைப்படுத்தி வைத்திருந்தான். அவன் தன் நாட்டிற்குச் செல்லுமுன் கப்பலுக்கு அவசியமாய் வேண்டிய சில சாமான்களை வாங்குவதற்காக கரும்பூரை நெருங்கும்போது, கப்பல் புயற்காற்றில் சிக்கிக்கொண்டது. கமலாம்பாளும் தானும் தப்பித்துக்கொள்ள வெண்ணி ஒரு கட்டுமரத்தில் உட்கார்ந்தபோது, கமலாம்பாள் மூர்ச்சையடைய அவளை அம்மரத்தில் கட்டிவிட்டுக் கரையை நோக்கிவந்தான். ஸர்தாரிடம் சிக்கியபோது அவசரப்பட்டு அவள் தன் மனைவியென்று கூறிவிட்டான். தன் கப்பலிலிருந்து கரைக்கு அடித்துக்கொண்டு வந்துவிட்ட பெட்டியிலிருந்த கறுப்புக்கொடியை ஸர்தார் காட்டியதே "ஓகோ! நமது கப்பல் கடற்கொள்ளையடிக்கும் கப்பலென்று இவர்களுக்குத் தெரிந்துவிட்டது. இனி நாம் இங்கிருந்தால் பிராணாபத்தாய் முடியும்" என்றெண்ணி மறுபடி கடலில் குதித்து தன் சாமர்த்தியத்தால் தன் கப்பலுக்குப்போய்ச் சேர்ந்தான்.

கமலாம்பாளுக்கு ஸ்மரணை வந்தபோது தான் இன்னாளென்றும் கள்ளக் கப்பலில் தான் அக்கிரமமாய்க் கொண்டு வரப்பட்டதைப்பற்றியும் ஒருவாறு தெரிவித்தாள். அவள் செல்வராயருடைய புத்திரியென் றறிந்ததே, சர்தார் அவளைத் தன் தங்கைவீட்டிற் கொண்டுபோய் தக்க உபசாரத்தோடு வைத்திருக்கும்படி ஏற்பாடு செய்தார். அதன் பிறகே கண்ணபிரான் அங்கு சிறை வைக்கப்பட்டிருக்கும் சங்கதி கமலாம்பாளுக்குத் தெரிந்தது அதைக் கூறிய வேலைக்காரியே ஸர்தாரின் குணத்தைப்பற்றியும் அவர் கண்ணபிரான் விஷயத்தில் அன்புவைத் திருப்பதைப் பற்றியும்

யாவும் விவரமாய்க் கமலாம்பாளிடம் கூறினாள். அதன்பிறகு கமலாம்பாள் ஸர்தாரின் தங்கையான இரத்னம்மாளிடம், கண்ணபிரானிடம் தான் காதல்கொண் டிருப்பதைச் சாடையாய் வெளியிட்டு, அவள் மூலமாய் ஸர்தாரிடம் தான் வைத்திருந்த பாதுகாப்புக் கடிதத்தையளித்து அதைக் கண்ணபிரானிடம் சேர்ப்பிக்கச் செய்தாள். அவளுக்கு இன்னும் நடந்து செல்லச் சக்தி வராததால், தானே நேரில்சென்று கண்ணபிரானைக்காண முடியவில்லை. அக்கடிதம் தன்னிடம் எப்படி வந்ததென்பதைப் பற்றிப் பிறகு கூறுவதாய் இயம்பினாள்.

ஸர்தார் அதைக்கண்டதே கண்ணபிரானை விடுதலை செய்துவிடத் தனக்குப் போதுமான காரணங் கிடைத்ததென்று சந்தோஷமடைந்தார். அதைத்தான் அவர் தன் வேலையாளிடம் இரகசியமாய்க் கொடுத்து கண்ணபிரானிட மளிக்கும்படி கட்டளை யிட்டது.

பலராமன் மெதுவாய்த் தன் கப்பலிலிருந்து கரைக்கு வந்து ஒரு ஹோட்டலில் நுழைந்தபோது, கடலோரத்தில் கடந்த இரவு இவனைப் பிடிக்க முயன்ற ஜனங்கள் பார்த்துப் பிடித்து, நியாயசபைக்குக் கொண்டு வந்தார்கள். அச்சமயம் கண்ணபிரான் தன்னிட மிருந்த கடிதத்தை வெளியி லெடுத்ததால், பலராமன் அதைப்பார்த்துக் கூவினான். இனி கதையைத் தொடங்குவாம்.

பலராமன் அந்தப் பாதுகாப்புப் பத்திரம் என்னுடையது என்றதே, ஸர்தார், கண்ணபிரானிட மிருந்த அப்பத்திரத்தை வாங்கிக்கொண்டு, "கமலாம்பாள் நான்கு நாட்கள் கள்ளக் கப்பலில் சிறைப்பட்டிருந்தபோது பலராமன் எப்படியோ அதைப் பார்த்திருப்பான். அதனால் தான் அதைக் கண்டவுடன் தெரிந்து கொண்டு தன்னதென்று சாதித்து தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறான்" என்று ஸர்தார் எண்ணிக் கொண்டார். கண்ணபிரான் "கள்ளப் பயலே, உன்னுடையதா?" என்று பலராமனைப் பிடித்துத் தள்ளியதே அவ்வூர் மேயர் எழுந்து இவனை வெளியில் கொண்டு போங்கள் என்றார்.

பலராமன்—ஐயோ நீதியில்லையா! நீதி யில்லையா!" என்று கூவினான்.

ஸர்தார்.—'பின்னால் விசாரித்து உனக்கு நீதி யளிக்கப்படும். ஆனால் அந்த நீதி யுனக்கு மிக்க கைப்பாகவே யிருக்கும்?" என்றார்.

பலராமன்.—"என் கப்பல் கள்ளக்கப்பலென்று யார் குற்றம் சாட்டுவது? கப்பலைச் சேர்ந்த பத்திரங்களனைத்தும் சரியா யிருக்கின்றன. தங்களிடம் அகப்பட்ட அந்தக் கறுப்புக்கொடி எங்களைத் தாக்கிய ஒரு கள்ளக் கப்பலிலிருந்து எங்களால் கைப்பற்றப் பட்டது. அப்படியிருக்க எங்கள் கப்பல் கள்ளக் கப்பல் என்று யார் கூறுவது" என்றான்.

கண்ணபிரான்.—"இவனும், இவன் தந்தையும், இவர்களோடிருப்பவர்களும், யாவரும் கடற்கொள்ளைக்கார ரென்று நானே ருசுப்படுத்துவேன்" என்றான்.

பலராமன் "நீ இராஜத்துரோகி. உன்வாயை மூடிக்கொண்டிரு. மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கும் உன் பேச்சு சட்டப்படி செல்லாது" என்றதே, ஸர்தார் கோபமடைந்து,

"அடே கள்ளப்பயலே! உன் இந்திரஜாலம் ஒன்றுமே பலிக்காது. கப்பல் சேதமடைந்த அந்த ஸ்திரீ ...." என்பதற்குள், பலராமன் இறுமாப்போடு,

'ஓகோ! என்னைக் கெடுக்கத் தாங்களே பொய்கூறத் துணிந்து விட்டீர்களோ! அந்த ஸ்திரீ மூர்ச்சை தெளியாமல் இரவு அந்தக் குகையி

லேயே இறந்துபோன சங்கதி யெனக்குத் தெரியாதென்று நினைக்கவேண்டாம்'' என்றான்.

ஏனெனில், அவன் கூறியபடி கப்பற் சேதமடைந்த ஸ்திரீ இறந்து போனாள் என்று ஒரு பொய் வதந்தி யுண்டாயிருந்தது. அதை நம்பிக் கொண்டுதான் பலராமன் தைரியமாய்க் கப்பலைவிட்டுக் கரைக்குவந்தான். ஆகையால் அவன் வார்த்தைக்குப் பதிலாய் ஸர்தார் "அடா மூடனே! நீ கூறியதற்கு மாறாய் அந்த ஸ்திரீ கடவுள்தயவால் சுகமடைந்து நியாயசபைக்குவந்து நீ யவளைக் கப்பலில் 4 நாட்களாய் சிறை வைத்திருந்ததுமுதல் யாவும் வெளியிட ஆயத்தமா யிருக்கிறாள்'' என்று கூறியதே, பலராமன் பேரிடி விழுந்தவன்போல் பிரமித்துப் பேச நாவெழாமல் முகம்வெளுத்து மரம்போல் நின்றான்.

ஸர்தார் "இவனை யப்புறம் கொண்டு போங்கள்!'' என்றதே காவலர் அவனைப் பிடித்துக்கொண்டு அறையை விட்டு வெளிச் சென்றார்கள்.

ஸர்தார் தம் கையிலிருக்கும் பத்திரத்தை வாசித்துப் பார்த்துவிட்டு, சுந்தரநாயகம் பிரபுவை நோக்கி,

"ஹா! இது பெரிய விஷயமே. இது உமக்கு மிக்க சந்தோஷத்தை யுண்டாக்கும் என்பது உண்மை. ஏனெனில் தாங்கள் இராஜ விசுவாசத்தையும் நீதியையும் கருதியே தங்கள் நெருங்கிய சுற்றத்தாராகிய இக்கண்ணபிரான் பிரபுவைப் பிடித்துக்கொடுத்தபோதிலும், தங்களுக்கு அவர்மேலுள்ள அந்தரங்க விசுவாசத்தை யானறிவேன். ஆகையால் உங்களுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்கும் சங்கதியை யறிவிக்க நான் மகிழ்வடைகிறேன்'' என்றார்.

இதைக் கேட்டதே பிரபுவின் மனம் கலக்கமடைந்தது. அடடா நாம் இவ்வளவு நயவஞ்சக தந்திர சாமர்த்தியங்களை யெல்லாம் செய்தும், கடைசியில் இவன் எங்கே உயிரோடு தப்பித்துக் கொள்ளுவானோவென்று அவருக்குப் பெருந்திகில் உண்டாய் விட்டது. ஆகையால் அவர் தடுமாற்றத்தோடு, "ஏதோ, அதில் என்னவிருக்கிறது? இப்படிக்காட்டும். அல்லது வாசித்துக் காட்டும்'' என்றார்.

ஸர்தார் "ஆ இதிலுள்ள விஷயத்தை யின்னும் வாசித்துக் காட்டா மலே பேசுகிறேன்'' என்று அக்கடிதத்தை வாசித்துக்காட்டினார். முன் செல்வராயர் அதைக் கமலாம்பாள், தங்கம்மாள், அரியநாயகி யிவர்கட்கு வாசித்துக்காட்டிய சந்தர்ப்பத்தில் (14--வது அத்தியாயத்தில்) அக்கடிதத்திலடங்கிய விஷயம் கூறப்பட்டிருப்பதால், ஈண்டு மறுபடி வரைவது அனாவசியமாகும்.

இராணியின் கையொப்பத்தையுடைய அப்பத்திரத்தின் விஷயத்தைக் கேட்ட சபையோ ரனைவரும் மிக்க சந்தோஷமடைந்தார்கள். சுந்தரநாயகம் பிரபு மட்டும் இடி விழுந்த நாகம்போல் ஆவி சோர்ந்து பேச நாவெழாமல் தயக்க மடைந்தார். அவர் பின்னால் நின்றிருந்த அவருடைய துன்மந்திரியாகிய மணவாளனும் தன் எஜமானனைப் போலவே திகிலடைந்தான். கரும்பூர்மேயர் "ஓகோ, பிரபு சந்தோஷ மிகுதியால் திகைப்படைந்து விட்டார்போலும்'' என்றார்.

பிரபுவின் அந்தரங்க வஞ்சகத்தை நன்கறிந்த ஸர்தார் "ஆம் ஆம் ஏதோ ஒருவித உணர்ச்சியால் பிரமைகொண்டு விட்டார். சரி. இப்போது நான் இதில் கூறப்பட்ட இராணியின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியதே. இதுவோ கண்டிப்பான கட்டளை......'' என்றதே,

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

சித்தார்த்தி௵ புரட்டாசி௴—சாலிவாகனம் 1841-கலியுகாதி 5020

பசலி 1328-29—கோல்லம் 1094-95 - ஹிஜரி-1337-

இங்கிலீஷ் 1919-ம்௵ செப்டம்பர்௴—அக்டோபர்௴

புரட்டாசி௴	செப்டம்பர்	வாரம்	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	17	பு	அ-28-4	மிரு-28-23	சித்த-60	மாளயபக்ஷமாதால் சுப காரியங்கள் நிவர்த்திக்கப் பட்டது.
2	18	வி	நவ-22-57	திரு-25-9	ம-25 அ	
3	19	வெ	தச-18-29	புன-22-35	அ-22 ம	
4	20	ச	ஏ-14-50	பூச-20-46	சி-20 ம	
5	21	ஞா	து-12-3	ஆயி-19-57	சி-20 ம	
6	22	தி	திர-10-31	மக-20-22	ம-20 சி	
7	23	செ	ச-10-17	பூர-21-59	சி-22 அ	
8	24	பு	●-11-8	உத்-24-43	அ-24 ம	....
9	25	வி	பிர-13-27	அஸ்-28-48	சித்த-60	நவராத்திரி ஆரம்பம்
10	26	வெ	து-17-6	சித்-33-54	சித்த-60	
11	27	ச	தி-21-14	சுவா-39-46	அ-40 சி	
12	28	ஞா	ச-26-2	விசா-45-59	ம-60	
13	29	தி	ப-31-6	அனு-52-22	சித்த-60	
14	30	செ	ஷ-35-59	கேட்-59-25	சி-59 அ	
15	1919௵ அக்டோபர் 1	பு	சப்-40-20	மூல-60-0	மர-60	
16	2	வி	அ-43-45	மூல-3-53	சித்த-60	
17	3	வெ	நவ-46-8	பூரா-8-26	சித்த-60	
18	4	ச	தச-47-15	உத்-11-46	சித்த-60	
19	5	ஞா	ஏ-47-6	திரு-13-51	அ-14 ம	
20	6	தி	து-45-35	அவி-14-42	சித்த-60	விவாஹ உபனயனம்
21	7	செ	திர-42-58	சத-14-25	மர-60	....
22	8	பு	ச-39-26	பூர-13-2	அ-60	மந்திர ஜெபிக்க
23	9	வி	○-35-25	உத்-10-48	சித்த-60	....
24	10	வெ	பிர-29-54	ரே-7-46	அ-60	ராஜதர்சனம், விதைக்க
25	11	ச	து-24-19	அசு-4-13	சித்த-60	வடக்கே பிரயாணம்
26	12	ஞா	தி-18-27	கிரு-55-5[illegible]	சித்த-60	சூளைபோட
27	13	தி	ச-12-29	ரோ-52-2	அ-60	விவாஹ உபனயனம்
28	14	செ	ப-6-35	மிரு-48-11	சித்-48-ம	கிழக்கே பிரயாணம்
29	15	பு	ஷ-1-4	திரு-44-47	சித்த-60	கரிநாள்
30	16	வி	அ-51-34	புன-42-3	அ-60	சீமந்தம், பும்சவனம்.

		கே	
	13 சி-செ. 2 கன்-பு. 18 து-பு. 2 சி-வ-சு.		செ குரு
			பு-ச
	ராகு		ர-சு

Printed and Published by N. Munisawmi Mudaliar at the "Ananda Bodhini" Press, 15, Venkatesa Maistry Street, Madras.